REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 டிசம்பர் 6 செவ்வாய்க்கிழமை

1932 - 2022

வரு. 90 இல. 288 | Tuesday 06, December, 2022 | 12பக்கங்கள் | 50/-




## நாடளாவிய நீதிமன்றங்களில் 10,94,912 வழக்குகள் வருடக்கணக்காக நிலுவையில்

### சிறைகளில் 26,000 கைதிகள் தண்டனை அனுபவிப்பு

### சபையில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியிலுள்ள நீதிமன்றங்களில் 10 இலட்சத்து 94ஆயிரத்து 912 வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை, நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளில் சுமார் 26 ஆயிரம் கைதிகள் தண்டனை அனுபவித்து வரும் நிலையில் அவர்களில் 60 சதவீதமானோர் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் 06

## விற்றோ Gas விலை நேற்று முதல் அதிகரிப்பு

### 12.5 Kg சிலிண்டர் ரூ. 250 ஆல் உயர்வு



விற்றோ எரிவாயு விலை சூத்திரத்தின்படி திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று (05) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி, 12.5 கிலோ கிராம் 06

### 2024ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ள

## A/L மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில்

2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதல் முறையாக தோற்றி ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



வின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ள 06

### விளையாட்டு, சுகாதார, இளைஞர் விவகார அமைச்சுக்களுடன் இணைந்து

# விசேட தேவையுடையோருக்கு கை கொடுக்க விசேட திட்டம்

### அமைச்சரவையில் விரைவாக சமர்ப்பித்து நடவடிக்கை

**சர்வதேச மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி**

விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விளையாட்டு, சுகாதாரம், இளைஞர் விவகாரம் உள்ளிட்ட பல அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இப்புதிய வேலைத்திட்டத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விசேட தேவையுடையவர்களின் நலனுக்கான புதிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

மகளிர், சிறுவர் அலுவல்கள், சமூக வலுவூட்டுகை அமைச்சு, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தலைமைச் செயலகத்துடன் இணைந்து 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஊனமுற்றோர் 06



### மக்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்காது செயற்படும்

## இ.போ.ச வின் தலைவரை உடன் இராஜினாமா செய்யுமாறு பணிப்பு

### போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன அதிரடி



மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட அரசு முடிவை நடைமுறைப்படுத்தாத இலங்கை போக்குவரத்து சபை தலைவரை உடனடியாக தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

அரசின் கொள்கை முடிவுகளுக்கு அமைய மாகும்புற பல்துறை மத்திய நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணம் செய்யும் விதத்தில் சிட்டி பஸ் சேவை 15.1.2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த பஸ்சேவை காரணமாக 06

## 03 குடும்பங்களின் தேவைகளுக்காக 200 குடும்பங்களுடன் விளையாடாதீர்கள்

### பூநகரி ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் சங்க செயலாளர் கவலை




கிராஞ்சியில் கடல் அட்டை பண்ணைகள் வேண்டாம் என போராட்டம் நடாத்தும் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் சுமார் 200 குடும்பங்களின் வாழ்க்கையை கெடுக்கும் வகையில் செயற்படுவது கவலை அளிப்பதாக பூநகரி சிறீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தம்பிப்பிள்ளை மகேந்திரன் கோரிக்கை முன்வைத்தார். யாழ் ஊடக அமையத்தில் 06

## ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்பட்டமை சிறந்த முடிவு

### SLPPக்குள் எந்த பிளவுமே இல்லை - பெசில்



படம்: நிஷ்ஷங்க விஜேரத்ன

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தமை மிகவும் சரியான தீர்மானம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் சுதந்திரமாக அரசியல் செய்ய இடமளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்பதாக தெரிவித்த அவர், தற்போது நாட்டில் அவ்வாறானதொரு சூழல் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக மையம் ஸ்தாபிக்கப்பட்டு நான்காம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (5) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு 06

### பயணிப்போர் எண்ணிக்கை மிகக்குறைவு;

## விடுமுறை தினங்களில் இனி 50 சதவீத பஸ்களே சேவையில்

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தீர்மானம்



தனியார் பஸ்களில் பயணிப்போரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் நாளாந்த வருமானம் குறைவடைந்துள்ளதென தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், வார இறுதி மற்றும் பொது விடுமுறை நாட்களில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதனை 50 சத வீதமாக குறைக்க தீர்மானித்துள்ளதாகவும் 06

### நாட்டில் தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டுமானால்

## அடுத்த வருடம் முதல் ஓர் அலகு மின் கட்டணம் 56 ரூபா 90 சதம்

### வருமானம் குறைந்தோருக்கு நிவாரணம் வழங்கவும் பரிந்துரை



அடுத்த வருடம் நாட்டில் தடை இல்லாமல் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமானால், ஓர் அலகு மின்சாரத்திற்கு ரூ. 56.90 சதம் செலவிட வேண்டும் என இலங்கை மின்சார சபை மதிப்பிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதற்கமைய, ஓர் அலகுக்கு 56.90 06

## பலாலி விமான நிலைய சேவைகள் 12 முதல் மீண்டும்

### சபையில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொவிட்19 தொற்று காரணமாக இடைநிறுத்தப்பட்ட யாழ். பலாலி சர்வதேச விமான நிலையத்தின் விமானச் சேவைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்துள்ளார். 06

## பொதுத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்

### TNA தலைவர் சம்பந்தன் வலியுறுத்துகிறார்



விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் த ஃப்ரொன்ட்லைன் (Frontline) சஞ்சிகைக்கு வழங்கிய விசேட பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார். 06

## எரிபொருள் விலையில் அதிரடி மாற்றம்

### டீசலின் விலை 10 ரூபாவினால் குறைப்பு



அமுலுக்கு வரும் வகையில் ஒட்டோ டீசலின் விலை நேற்று (05) நள்ளிரவு முதல் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக சிபெட்கோ 06



## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 20 பேர் கைது


திருகோணமலை, சம்பூர் கடற்பரப்பில் கடற்படை அதிரடி 03



### 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன் அரசியல் தீர்வு;

## ஜனாதிபதியின் வாக்குறுதி குறித்து நீதியமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்

சபையில் சுமந்திரன் எம்பி வேண்டுகோள் 03



## மின், எரிபொருள் உட்பட பல அத்தியாவசிய சேவைகளாகின

ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி வெளியீடு 03

## USAID துணை நிர்வாகி இலங்கை வந்துள்ளார்

### அரச, சமூக தலைவர்களை சந்திப்பார்



சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஆசிய பணியகத்தின் துணை நிர்வாகி அஞ்சலி கௌர் குறுகிய கால விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இவர் தனது 06

## கொழும்பிலிருந்து யாழ் சென்ற சொகுசு பஸ் நேற்று விபத்து




22 பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசு பஸ்ஸொன்று விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று 06

## வங்காள விரிகுடாவில் நேற்று 5.1 ரிக். பூகம்பம்

### சுனாமி குறித்து எச்சரிக்கை இல்லை




வங்காள விரிகுடாவில் நேற்றுக் காலை 5.1 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் தேசிய புவியதிர்வு மத்திய நிலையமும் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில், 10 கிலோ 06

### தொடரும் மழையுடனான காலநிலை;

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



தற்போது தொடரும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டின் ஐந்து மாவட்டங்களில் பல பிரதேசங்களுக்கு 06

# மின் கட்டணத்தை அதிகரிக்கும் அரசின் தீர்மானம் குறித்து சபையில் அறிவிப்பு

## ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இன்று அறிவிப்பதாக சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மின் கட்டணத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில் அது தொடர்பில் ஜனாதிபதியுடனும் அமைச்சரவையிலும் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் அத்துடன் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இன்றைய தினம் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பொதுஜன பெரமுன எம் .பி ஜகத்குமார, விமல் வீரவன்ச உள்ளிட்ட பலரும் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் இணக்கம் தெரிவிக்கத் தயாரில்லை. எனினும் மின் உற்பத்திக்கான அதிகரித்த செலவு, உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பும் இதற்கு முக்கிய காரணமாகின்றன என்பதையும் அவர் சபையில் சுட்டிக் காட்டினார்.



அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

1962 ஆம் ஆண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது முதல் எத்தனை தடவைகள் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்பது தொடர்பில் நாம் பார்க்க வேண்டும்.

முதலில் எமது நாட்டில் மின்சாரம் தொடர்பான கொள்கை எந்தக் காலத்திலும் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதுவும் இத்தகைய நெருக்கடிகளுக்கு காரணமாகும்.

மின்சாரத்துறை மூன்று பிரிவுகளாக செயல்படுகின்றது. மின் உற்பத்தி, மின் பாதுகாப்பு மற்றும் மின் விநியோகம் என அது செயல்படுத்தப்படுகிறது. இந்த மூன்று பிரிவுகளில் எந்த பிரிவு நட்டத்தில் இயங்குகிறது என பார்ப்பது அவசியம்.

எமது நாட்டிற்கு பொருத்தமான மின் உற்பத்தி என குறிப்பிடும் போது அது நீர் மின் உற்பத்தியே என குறிப்பிட முடியும்.

நீர் இல்லாத காலங்களில் எரிபொருள் மற்றும் நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படும் போது அதற்கு பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. மின் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலைமை அதனால் தான் ஏற்படுகின்றது.

இவ்வாறு மின் கட்டணம் மேலும் மேலும் அதிகரிக்கப்படும் போது எமது தேசிய கைத்தொழில் துறை செலவுகள் அதிகரித்து அதன் மூலம் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படுகிறது. அத்துடன் பணவீக்கமும் ஏற்படுகிறது.

எவ்வாறெனினும் மின்சார சபையை 8 துண்டுகளாக பிளவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வெளியிடப்படும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. அவ்வாறான எத்தகைய தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலரும் அவ்வாறான கூற்றுக்களை வெளியிட்டு வருவதுடன் சில பத்திரிகைகளும் அதனை செய்திகளாக வெளியிட்டு வருகின்றன. அதில் எந்த உண்மையும் கிடையாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சிறந்த அரசியலமைப்பு ஒன்றின் மூலமே சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்

## சபையில் அதாவுல்லா எம்பி

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் ஒரு சிறந்த அரசியலமைப்பு இல்லாமையே தொடர்ந்து எதிர்கொள்ள நேர்ந்த பிரச்சினைகளுக்கு முக்கியமான காரணம் என ஏ.எல்.எம் அதாவுல்லா எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எல்லாக் காலங்களிலும் அதற்கான வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ள போதும் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அந்த வகையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கொண்டு வந்த அரசியலமைப்பு சட்டமூலத்திற்கும் நாம் வாக்களித்துள்ளோம் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அதற்காக மேற்கொண்ட அனைத்து பிரயத்தனங்களும் வீணானது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் அவசியமான உரிமையை எவ்வாறு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது தொடர்பில் வேறு வேறு நாடுகளின் கோரிக்கைகளே இதுவரை கேட்கப்பட்டுள்ளன.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு என்ன வழி என்பதற்கு தீர்வு சிறந்த அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வருவதே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக தாம் பதவி வகித்த காலத்தில்

# தனிப்பட்ட பணியாற்றொகுதியினருக்கு அதிகளவு நிதியை செலவிடவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதியாக தாம் பதவி வகித்த காலத்தில் தமது தனிப்பட்ட பணியாற்றொகுதியினருக்கு அதிகளவில் நிதியை செலவிட்டதாக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி: மஹிந்த ராஜபக்ஷவும் தாமும் ஜனாதிபதி செயலகத்தை நடத்துவதற்கு அதிகளவு நிதியை செலவிட்டுள்ளதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.



குறிப்பாக ஜனாதிபதி செயலகத்தின் பணிகளுக்காக 1480 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி, ஜனாதிபதிக்கான நிதியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ 43 வீதமும் தாம் 57 வீதமும் எமது தனிப்பட்ட பணியாற்றொகுதியினருக்கு செலவிட்டுள்ளதாக தகவலறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அது உண்மைக்குப் புறம்பான செய்தி எனவும் தமது ஆட்சிக் காலத்தில் தாம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் சர்வதேசம் வரை பேசப்பட்டன என்றும் அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காகவே தமக்கு வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் விஜேராஜ், புரவலர் ஹாசிம் உமரை அண்மையில் அவரது இல்லத்தில் சந்தித்தார். இதன்போது புரவலர் ஹாசிம் உமர் விஜேராஜுக்கு கிராமிய கலைகள் சம்பந்தமான நூலொன்றை அன்பளிப்பாக வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம். ஒன்றியத்தின் ஆலோசகர் அசோகனும் அருகில் காணப்படுகிறார். (படம்: ருசைக் பாரூக்)

## நகர்வலம்

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

## பெற்றோர்களை அவதானமாக செயற்பட கோரிக்கை

(வெலிகம தினகரன் நிருபர்)

இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இப்பாவனை அதிகரித்து வருவதாகவும், மாணவர்களை இலக்கு வைத்து விற்பனைகள் இடம்பெறுவதாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி உள்ளன. எனவே, இவ் விடயத்தில்

பெற்றோர், ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி உள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். மேலும் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வாங்கிக் கொடுக்கும் போதும் மிகவும் அவதானமாக பெற்றோர்கள் செயற்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக, ஐஸ் போதைப் பொருள் பாவனையே அதிகரித்து வருகின்றது. இதற்கு அதிகமானோர் அடிமைப்பட்டு வருகின்றனர்.

இதனை இல்லாதொழிக்க சகலரும் முன்வர வேண்டும். கிராமம், கிராமமாக இதன் விளைவுகளைச் சுட்டிக் காட்டி, இதைக் கட்டுப்படுத்த சகல மட்டத்தினரும் ஒத்துழைக்க வேண்டியுள்ளது. மதஸ்தலங்கள், பொது அமைப்புக்கள், மற்றும் சமூக சேவையில் ஈடுபடும் சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து இதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதே, சிறந்ததென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில், கண்மூடித்தனமாக இருப்பின் எதிர்காலத்தில், பல விளைவுகளை சமூகம் எதிர்கொள்ள நேரிடும். போதைப் பாவனையால், தற்கொலை, கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறும் அபாயங்களும் தோன்றியுள்ளன.

இந்நிலை ஏற்படுவதற்கு முன்னர், தமது பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்வது சமூகத்தின் கடப்பாடாகும் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# மார்கழிப் பெருமை நூலின் முதற்பிரதி எழுத்தாளர் ஜி. சிவராமனுக்கு கையளிப்பு



சொற்பொழிவாளர் முனைவர் சுந்தர ஆவுடையப்பன் எழுதிய 'மார்கழிப் பெருமை" எனும் நூலின் முதற்பிரதியை மூத்த எழுத்தாளர் ஜி,சிவராமன் பெற்றுக் கொண்டார். கரூர் மாவட்ட மைய நூலகம் நடத்திய சிந்தனை முற்றம் நிகழ்வில், இந்நூல் வெளியிடப்பட்டது.

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மேனாள் செயலாளர் சிவக்குமாரின் தந்தையார், ஆன்மீகச் செம்மல் பிச்சைமுத்து இந்நூலை வெளியிட்டிருந்தார்.

இவ்விழாவில் நூலாசிரியர் சுந்தர ஆவுடையப்பன், பபாசி தலைவர் வைரவன், சிந்தனை முற்றத்தின் தூண்களான தீபம் சங்கர், நூலகர் சிவகுமார், முனைவர் கோவிந்தராஜு, கல்வியாலாளர் ராமசுப்பிரமணியன், சொற்பொழிவாளர் ரோட்டரி பாஸ்கர் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் முனைவர் சுந்தர ஆவுடையப்பனின் 'மறுபடியும் பிறப்போம்' எனும் நூலிலுள்ள ஆன்மீகம், திருக்குறள், இலக்கியம் முதலானவை குறித்து, யதார்த்த சொற்பொழிவும் இடம்பெற்றது.

# ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தில், அநுராதபுரம் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய (04) நள்ளிரவில் பொலிஸார் சுற்றிவளைப்பு நடத்தினர்.

அநுராதபுரம் பிள்ளையார் சந்திப் பகுதியிலே, இச்சுற்றிவளைப்பு நடாத்தப்பட்டது. இதன்போது, கைப்பற்றப்பட்ட நபரிடமிருந்து 11 கிராம் நிறையுடைய, ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 48 வயதுடைய தஹய எல, அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் விஜேகோண் பண்டார உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஸ்தாபக தின நிகழ்வு





(ருஸைக் பாரூக்)

கொழும்பு சாஹிரா கல்லூரி ஸ்தாபகர் தினம் (03) சனிக்கிழமை கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் இடம்பெற்றது.கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கைக்கான எகிப்து அரபுக் குடியரசின் தூதுவர் மாகேட் மோஸ்லே "இலங்கையில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒராபி பாஷாவின் பங்களிப்பு" என்ற தொனிப் பொருளில் உரையாற்றினார்.

கல்லூரி ஸ்தாபகர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது. மௌலவி அப்துல் ஹலீம் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸாஹிரா கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவர் பௌசுல் ஹமீட் மற்றும் அதிபர் ரிஸ்வி மரிக்கார் ஆகியோர் இணைந்து எகிப்து தூதுவர் மகேத் மொஸ்லேவுக்கு கல்லூரி சார்பாக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

லிபியத் தூதுவர் டாக்டர் மஹ்மூத் ஏ. எம். அல்மாலூல்,சவூதி அரேபிய தூதுவர் ஈசா அப்துல் ரஹ்மான் எச் அமல்கி, பிரதி அதிபர் ரஸீன் அசன், துணை அதிபர்கள் திருமதி ஹிஜாஸி மொஹிதீன், ஏ.எம்.மிஹிலர், மற்றும் ஆளுநர் சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# பசுமைப்பள்ளி தொனிப்பொருளில் பாடசாலை வளாகத்தில் மர நடுகை

(திறப்பனை தினகரன் நிருபர்)

"பசுமைப் பள்ளி" என்ற தொனிப் பொருளில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்று, அண்மையில் அநுராதபுரம் பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் மத்திய நுவரகம் பிரதேச செயலாளர் திரு.ஆர்.எம்.ஜி.சேனாரத்ன தலைமையில் நடைபெற்றது.

பலா, மா, ஜம்பு, செரி, மாதுளை போன்ற பல்வேறு வகையான 108 பழ மரக்கன்றுகள் பாடசாலை வளாகத்தில் நடப்பட்டன. பசுமைப் பள்ளி திட்டத்தில் வனப் பாதுகாப்பிற்காக பாடசாலை மாணவர்களின் பங்களிப்பைப் பெறுவதும், நாட்டிற்கும் உலகிற்கும் சுற்றுச் சூழலுக்கும் உகந்த தலைமுறையை உருவாக்குவதுமே இதன் முக்கிய நோக்கமாகும்.

விலங்குகளை நேசிக்கும் நல்ல மனப்பாங்குடன் குழந்தைகளையும், மரங்களையும் இலைகளையும் நேசிக்கும் மனிதர்களை உருவாக்குவதன் ஊடாகவே முழுமையான அழகான மனிதனைப் பெற்றெடுக்க முடியும்.

நாட்டின் ஒன்பது மாகாணங்களில், வறுமை மற்றும் கல்வியறிவின்மை அடிப்படையில் வட மத்திய மாகாணம் எட்டாவது இடத்தில் உள்ளது. வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலகப் பிரிவுகளில், மத்திய நுவரகம் பிரதேச செயலகப் பிரிவுதான், குறைந்த வசதிகளுடன் கூடிய வறிய மக்கள் வாழும் பிரதேசம் என பிரதேச செயலாளர் தனது உரையில் விளக்கினார். சமூக குறிகாட்டிகளின்படி. தாய், தந்தையர் தமது கனவுகளை பிள்ளைகள் மூலமே காண்கின்றனர், அந்தக் கனவுகளை நனவாக்க, பிள்ளைகள் கல்வியில் அதிக நாட்டம் கொள்ள வேண்டும் எனவும், அதற்காக பிள்ளைகள் மனமும் உள்ளமும் இணைந்து சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச செயலாளர் மேலும் வலியுறுத்தினார்.

இதன்போது, பூவரசங்குளம் கல்லூரியின் அதிபர், மற்றும் ஆசிரியர்கள், சுற்றாடல் உத்தியோகத்தர் எம். டபிள்யூ.கே.ஜெயலத் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 20 பேர் கைது

## திருகோணமலை, சம்பூர் கடற்பரப்பில் கடற்படை அதிரடி



திருகோணமலையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக இயந்திரப்படகில் பயணித்த 20 பேரை சம்பூர் கடற் பரப்பில் வைத்து நேற்று (5) திங்கட்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பூர் பரப்பில் சம்பவதினமான நேற்று அதிகாலை 3 மணியளவில் ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப்படகு பயணித்தபோது அதனை கடற்படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டபோது அதில் ஒரு பெண் உட்பட 20 பேர் அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக பயணித்துள்ளமையை அவதானித்த அதிகாரிகள் அவர்களை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை திருகோணமலை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் இவர்கள் களுவாஞ்சிக்குடி நாகர்கோவில் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை விசாரணையின் பின்னர் திருகோணமலை தலைமை பொலிசாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

# மின், எரிபொருள் உட்பட பல அத்தியாவசிய சேவைகளாகின

## ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி வெளியீடு



மின்சார விநியோகம், பெற்றோலிய பொருட்கள் விநியோகம் மற்றும் எரிபொருள் ஆகியவை அத்தியாவசிய பொதுச் சேவைகளாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டு விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கம் வழங்கும் அத்தியாவசிய பொதுச் சேவைகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இவ்விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டு இலக்கம் 61ஆம் இலக்க பொதுச் சேவைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி.ஏகநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த சனிக்கிழமை (03) வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி மின்சார விநியோகம், பெற்றோலிய பொருட்கள் விநியோகம் மற்றும் எரிபொருள் ஆகியவை அத்தியாவசிய பொதுச் சேவைகளாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளுக்கு பராமரிப்பு, வரவேற்பு, கவனிப்பு உணவு, சிகிச்சை தொடர்பாக செய்ய வேண்டிய அனைத்து சேவை, வேலை, உழைப்பு என்பனவும் இந்த வர்த்தமானியில் சேர்க்கப்பட்டுள்ளன.

75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன் அரசியல் தீர்வு;

# ஜனாதிபதியின் வாக்குறுதி குறித்து நீதியமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்

## சபையில் சுமந்திரன் எம்பி வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பதாக அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச உரிய கவனம் செலுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம் .பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமஷ்டி மூலமான அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராகவே உள்ளோம் என்பதை சபையில் தெரிவித்த அவர், அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதால் நாடு ஒரு போதும் பிளவடையாது என்ற உண்மையை அரசியல் தரப்பினர் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு ஆகியவற்றின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையியிலும் ஊழல்,

06



இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் Yuri Materiy நேற்று (05) கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு ராஜாங்க அமைச்சில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனை சந்தித்தார். இந்நிகழ்வில் ரஷ்ய தூதுவர் காரியாலய ராணுவ, விமான மற்றும் கடற்படை ஆலோசகர் Col.Aleksey Bondarev, பாதுகாப்பு அமைச்சின் உதவி இராணுவ தொடர்பாடல் அதிகாரி கர்னல் துசித்த பண்டார மற்றும் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ( பாதுகாப்பு) ஹர்ச விதானாரச்சி ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.



USAID உதவியின் கீழ் 9300 மெற்றிக் தொன் யூரியா உரத்தினை இலங்கைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று (05) கொழும்பு துறைமுக வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது அமெரிக்க உயர்ஸ்தானிகர் ஜுலி சாங்க் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பதையும் நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அபிவிருத்தி அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விமலேந்திர சரண், USAID ஆசியாவுக்கான பிரதிநிதி, உதவி நிர்வாகி அஞ்சலி கௌர் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில காணலாம். படம் வாசித பட்டபேந்திகே

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பு தயாரிப்பு

## நீதிமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு அரசாணை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் உள்ளிட்ட சிலர் தாக்கல் செய்த மனுவில் விளையாட்டுத் துறை அமைச்சர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி முஹமட் லாபர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இலங்கை கிரிக்கெட்டின் புதிய யாப்பு உருவாக்குவதற்கான தொழில்நுட்பக் குழுவொன்றை ஆலோசிக்கவுள்ளதாக தெரிவித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், விளையாட்டுச் சட்டம் மற்றும் அது தொடர்பான விளையாட்டு விதிமுறைகள் திருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சட்டமா அதிபரின்

06

# சிவனொளிபாத மலைக்கான யாத்திரை நாளை ஆரம்பம்



சிவனொளிபாத மலைக்கான வருடாந்த யாத்திரைக் காலம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது. புதன்கிழமை ஆரம்பமாகும் யாத்திரை அடுத்த ஆண்டு வெசாக் போயா வரை இடம் பெறும்.

ஸ்ரீ பாதஸ்தானாதிபதி, சப்ரகமுவ பிரதம சங்கநாயக்க மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தர் வணக்கத்திற்குரிய பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரரின் வழிகாட்டலின் கீழ் வருடாந்த யாத்திரை காலத்துடன் தொடர்புடைய அனைத்து பாரம்பரிய சம்பிரதாயங்கள் மற்றும் சடங்குகள் மேற்கொள்ளப்படும் என புத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் நாட்டில் கொவிட் 19 நிலைமையைக் கருத்திற் கொண்டு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 4 ஆவது மாடியிலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

## மொறட்டுவ பகுதியில் சம்பவம் பதிவு



மொறட்டுவ, லுனாவ, ரதுகுருச அடுக்குமாடி குடியிருப்பின் 4 ஆவது மாடியில் இருந்து ஒருவர் தவறி விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (04) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொறட்டுவெல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மொறட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டிகை காலத்தில் முட்டை விலை அதிகரிக்க வாய்ப்பு

## அரச கால்நடை மருத்துவர் சங்கம் எச்சரிக்கை



எதிர்வரும் பண்டிகை காலத்தில் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போது முட்டை விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் முட்டை பாவனையினை குறைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும், பண்டிகை காலத்தில் முட்டை வாங்குவதில் நுகர்வோர் அதிக கவனம் செலுத்துவர். இந்தநிலையில் முட்டை விலை அதிக அளவில் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முட்டை உட்பட உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக உணவு பாதுகாப்பு தன்மை காரணமாக மக்களிடையே போஷாக்கு குறைபாடு அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலை காரணமாக சிறார்களே அதிக பாதிப்புக்கு உள்ளாவதற்கான ஏதுநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதுதவிர, மின்சார பாவனை கட்டணங்கள், எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் வேதன அதிகரிப்பு என்பன உணவு பாதுகாப்பை அதிக அளவில் பாதித்துள்ளதாகவும் அரச கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

# பாடசாலை ஒன்றிலிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## சிற்றுண்டிச்சாலை நடத்திய பெண் கைது



பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து 7 ஐஸ் போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே மேற்படி போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் சிற்றுண்டிச் சாலையை நடத்தி வந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)**

**அரசாங்க தகவல் திணைக்களம்**

**உணவு பானங்களை வழங்குவதற்கான கேள்வி கோரல் – 2023**

அரசாங்க தகவல் திணைக்களத்தினால், ஏற்பாடு செய்யப்படும் ஊடக சந்திப்புக்கள், மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களிற்கு உணவு பானங்களை வழங்குவதற்குத் தகைமை பெற்றுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2022.12.27 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ரூபா 1,000.00 இற்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை, அரசாங்க தகவல் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்து, கேள்விக்கான படிவங்களை 2022.12.06 முதல் 2022.12.26 அன்று பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப் படிவங்களை அலுவலக நேரங்களில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

04. இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.12.14 அன்று மு.ப. 10.00 இற்கு நடைபெறும்.

05. முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் இலக்கம் 163, கிருளபன மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு- 05 என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது அதே முகவரியின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக சேர்த்தல் 2022.12.27 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும். விலைமனுத்திறத்தல் 2022.12.27 அன்று பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படும்.

06. கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், ‘உணவு, பானங்களை வழங்கலிற்கான விலைமனு’ எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**தினித் சின்தக கருணாரத்ன**
**அரச தகவல் பணிப்பாளர் நாயகம்,**
**அரசாங்க தகவல் திணைக்களம்**

**தொலைபேசி இல: 0112512332**
**தொலைநகல்: 0112514286**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 11

## குறள் தரும் சிந்தனை



உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ, அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்து செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

## வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கு செல்வோர் கொண்டுள்ள பொறுப்பு

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்களை அனுப்பி வைப்பதற்கு சட்டரீதியிலான வரையறைகளும் ஒழுங்குவிதிகளும் நடைமுறையில் உள்ளன. அவை தெளிவான ஏற்பாடுகளாகும். இச்சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு விவகாரத்தை கையாளவென தனியானதொரு நிறுவனம் இந்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதுதான் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விவகாரங்களும் இந்நிறுவனத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று செல்பவரின் பாதுகாப்பு உத்தரவாதம், தொழில் மற்றும் சம்பள உத்தரவாதம், தொழில் புரியும் இடத்தில் பாதுகாப்பு உத்தரவாதம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் இந்நிறுவனத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக இப்பணியகத்தில் பதிவு செய்து அதன் பயிற்சிகளை பூர்த்தி செய்து அது தொடர்பிலான வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

இப்பணியகத்தின் சட்ட ஒழுங்குவிதிகளை முறையாகக் கடைப்பிடித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்லும் போது தொழில் புரியும் இடத்தில் தொழில் மற்றும் சம்பள உத்தரவாதம், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான ஏற்பாட்டின் பிரதிபலனாக அண்மைக் காலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்கள் முன்பு போன்று அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பது பெரிதும் குறைவடைந்துள்ளது. இருந்த போதிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்டவிதிகளுக்கு அப்பால் ஆட்களை வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கு அனுப்பி வைக்கும் மோசடிகளும் இடம்பெற்று வருவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. அவற்றில் சுற்றுலா விசாவில் தொழில் வாய்ப்புக்கு அனுப்பி வைப்பதும் குறிப்பிடத்தக்கது. இது முற்றிலும் பாதுகாப்பற்றதும் தொழில் மற்றும் சம்பள உத்தரவாதம் அற்றதுமான தொழில்வாய்ப்பு முறையாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குரிய சட்ட ஒழுங்குவிதிகளைப் பேணி, அதற்கேற்ப தொழில்வாய்ப்பு பெற்றுச் செல்பவர்கள் பெற்றுக் கொள்ளும் வசதிகள் மற்றும் பாதுகாப்பை சுற்றுலா விசாவில் சென்று தொழில் பெற்றுக் கொள்பவர்களால் பெற்றுக் கொள்ள முடியாது.

இருந்தும் ஒரு சில முகவர்களின் ஏமாற்று வார்த்தைகளை நம்பி சுற்றுலா விசாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்பவர்களும் உள்ளனர். அவ்வாறானவர்களில் பலர் தொழிலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள நாடுகளில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அவற்றில் அண்மையில் சுற்றுலா விசாவில் ஓமான் நாட்டுக்கு வேலைவாய்ப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள பெண்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளும் சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

இந்நாட்டின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் சென்ற பலர், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்களில் தஞ்சம் அடையும் நிலைக்குக் கூட உள்ளாகின்றனர்.

இந்நிலையில்தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் மோசடியான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்பி வைப்பதைக் கட்டுப்படுத்துவது குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஆட்களை அனுப்புவது குறித்த தகவல்களை வழங்கத் தவறிய 400 முகவர் நிலையங்களின் உரிமம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாயணக்கார குறிப்பிட்டிருக்கிறார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். சட்டத்திற்கு முரணான வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்களை அனுப்பி வைப்பதைக் கட்டுப்படுத்துவதையும் அவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்பவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதையும் நோக்காகக் கொண்டுதான் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கை என்பது தான் அநேகரின் கருத்தாக உள்ளது.

அதேநேரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்ல விரும்புபவர், தாம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் அனுப்பி வைக்கப்படுகின்றோமா? அதற்குரிய உத்தரவாதங்கள் அளிக்கப்படுகின்றனவா என்பன தொடர்பில் கவனம் செலுத்தத் தவறக் கூடாது. அதன் ஊடாக மோசடியான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்பி வைக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். சுற்றுலா விசா என்பது தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கான விசா அல்ல என்பதையும் மறந்து விடலாகாது. அவ்வாறு தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டாலும் அது பாதுகாப்பானதாகவோ, சம்பள உத்தரவாதம் கொண்டதாகவோ இருக்காது.

ஆகவே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்ல விரும்பும் ஒவ்வொருவரும் தாம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் உரிய முறைப்படி பதிவு செய்து பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறோமா என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும். இது அவரவர் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பேராதனைப் பல்கலைக்கழக இஸ்லாமியத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அப்துல் பாரி காலமானார்

பேராதனை பல்கலைக்கழக இஸ்லாமியத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி (வயது 59) திஹாரியிலுள்ள தனது இல்லத்தில் நேற்று அதிகாலை காலமானார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட பட்டதாரியான அன்னார், தான் கல்விகற்ற நளீமிய்யா கலாபீடத்தில் பலவருட காலம் விரிவுரையாளராக பணியாற்றி வந்ததோடு, அதன்பின்னர் பதவியுயர்வு பெற்று பேராதனை பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் சென்றார்.

இருப்பினும் தன்னை உருவாக்கிய நளீமிய்யா கலாபீடத்தை அவர் மறக்கவில்லை. கலாபீடத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தார். நளீமிய்யாவின் முத்திங்கள் வெளியீடான 'இஸ்லாமிய சிந்தனை' காலாண்டு சஞ்சிகையின் மூலமாக பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதி கல்விச் சமூகத்திற்கு பாரிய பங்களிப்பையும் வழங்கினார். மேலும் ஜாமியாவின் பழைய மாணவர் அமைப்பான 'ராபிததுன் நளீமிய்யீன்' அமைப்பின் ஆலோசகர்களில் ஒருவராகவும் தான் மரணிக்கும்வரை பணியாற்றி வந்ததோடு, அதன் வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பைச் செய்தார்.

நளீமிய்யாவில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றிய அன்னார், மாணவர்களோடு என்றும் சிரித்த முகத்துடன் அளவளாவக்கூடியவராகவும் நன்றாகக் கற்பிப்பவராகவும் செயற்பட்டார். தான் ஒரு விரிவுரையாளராக இருந்த நிலையில் ஒருபடி இறங்கி மாணவர்களோடு நண்பரைப்போல் பழகக்கூடியவராக இருந்ததை நேற்றைய தினம் திஹாரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைத்திருந்த ஜனாஸாவில் ஒன்றுதிரண்ட அவரிடம் படித்த மாணவர் கூட்டம் சான்றுப்படுத்தியது.



நளீமிய்யா கலாபீட மாணவர்கள் மாத்திரமன்றி இவரிடம் பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளும் தனது ஆசானுக்கு இறுதிமரியாதை செலுத்த வந்திருந்ததைக் காண முடிந்தது.

அதேபோல் நாடளாவியரீதியில் இவரிடம் கல்வி கற்ற நூற்றுக்கணக்கான நளீமிய்யா பட்டதாரி மாணவர்களும் தனது ஆசானின் பிரிவு தாங்காமல் கண்கலங்கினர்.

இவரின் மறைவு தொடர்பில் கருத்துத் தெரிவித்த நளீமியா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத், நளீமிய்யா கலாநிலையம் உருவாக்கிய முத்துக்களில் ஒருவராக ஷெய்க் அப்துல் பாரியை நான் பார்க்கிறேன். அவரின் திடீர் மறைவுச் செய்தி என்னில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அன்னார் சிறந்ததொரு ஆசானாக, சிறந்ததொரு நண்பனாக காணப்பட்டார். அதேபோல் 'இஸ்லாமிய தஃவா' துறைக்கு பாரிய பங்களிப்பு செய்த அன்னாரின் நற்கருமங்களை வல்ல நாயன் பொருந்திக் கொள்ள வேண்டுமென தான் இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திப்பதாக தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டையை பிறப்பிடமாகவும் திஹாரியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார், மர்ஹூம்களான சனூன் ஆசிரியர்_ உம்மு ஆயிஷா தம்பதியினரின் அன்பு மகனும், கன்ஸுல் பாஹிமாவின் கணவரும், அஸீம்,அய்யாஷ்,ஆயிஷா அமானா,ஆகிப் ஆகியோரின் தந்தையும், நூர் நஸீரா, ஆசிரியை ஸீனதுல் முனவ்வரா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (திங்கட்கிழமை) மாலை திஹாரிய அமீனிய்யா ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், நளீமிய்யா கலாபீட முதல்வர் மற்றும் விரிவுரையாளர்கள், நளீமியா பழைய மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், மாணவர்களென பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

எம்.எப்.எம்.அஜ்வாத் பாஸி

# க.பொ.த (சா.த) பெறுபேற்றில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மட்டக்களப்பு கல்வி வலயம்

## வலயக் கல்விப்பணிப்பாளருக்கு பாராட்டு

க.பொ. த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில் அதன் பகுப்பாய்வுக்கு அமைய முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றி கணிதம், தமிழ் மொழி உட்பட 3 சி, 3 எஸ் பெறுபேறு 80.64 வீதத்தையும், க.பொ.த.உயர்தரத்திற்கு தகுதி பெற்றவர்கள் (1789) 87.01 வீதத்தையும்பெற்று மட்டக்களப்பு கல்வி வலயம் தேசிய மட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளது.

மேலும் 9 பாடங்களிலும் சித்தியடையத் தவறிய மாணவர் தொகை 07 (0.34வீதம்) ஆகும். இது தேசிய மட்டத்தில் மிகவும் குறைந்த மாணவர் தொகையாகும்



இதுவும் மட்டக்களப்பு கல்வி வலயம் தேசிய மட்டத்தில் பெற்றுள்ள வெற்றியாகும்.

வெளியான 2021 ஆம் ஆண்டுக்கான க. பொ.த சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயம் சிறந்த அடைவு மட்டத்தை அடைந்துள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளார் சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 2156 மாணவர்களில் 128 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் 'ஏ' தர சித்திகளை பெற்றுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 80.64 வீதத்தினர் சித்தி வீதத்தினை அடைந்துள்ளதாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளார் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் இம்முறை க.பொ.த சாதாரண தரத்தில் வெற்றி பெறுவதற்கு வலய கல்விப் பணிமனையின் சிறந்த திட்டமிடலுடனான செயற்பாடே காரணம் என்று அதிபர்கள் தெரிவித்தனர்.

இந்த பெறுபேற்றையடுத்து மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் சுஜாதா குலேந்திர குமாரை சந்தித்த மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் தேசியமட்டத்தில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதல் இடத்தினைப் பெற்றுக் கொண்டதற்காக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த பெறுபேற்றை அடைவதற்கு மட்டக்களப்பு வலயக் கல்விப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையிலான மட்டக்களப்பு வலயக் கல்வியலுவலகம், கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள், அதன் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்கள் பெற்றோர் எனப் பலரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தை தேசிய மட்டத்தில் முதல் இடத்துக் கொண்டு போய் நிறுத்தியுள்ள வலயக் கல்விப்பணிப்பாளர் சுஜாதாவின் முயற்சியையும் அர்ப்பணிப்பையும் மட்டக்களப்பிலுள்ள அனைத்துத் தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் மட்டக்களப்பு வலய கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்வி பணிப்பாளர் தேவரஜனி உதயகரன், மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் சிறந்த முறையில் கற்றல் செயற்பாடுகளை முன்கொண்டு சென்றதன் காரணமாக இந்த வெற்றியை பெற முடிந்ததாக குறிப்பிட்டார்.

எம்.எஸ்.எம்.நூர்தீன்
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# பா. ஜ. கவின் அடுத்தகட்ட ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கவிருக்கும் குஜராத் தேர்தல் முடிவு!

## பெண்ணுக்கு முன்னுரிமையளித்து, நிதானமாக வாக்களித்த பிரதமர் மோடி

குஜராத் மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலில் 93 தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டத் தேர்தல் நேற்று நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி தனக்குரிய வாக்குச்சாவடிக்கு வாக்களிக்கச் சென்ற போது, பெண் வாக்காளர் ஒருவரை முதலில் வாக்களிக்க அனுமதித்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

குஜராத் மாநிலத்தில் உள்ள 182 தொகுதிகளில் 89 தொகுதிகளுக்கு கடந்த 1ஆம் திகதி முதல் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதமுள்ள 93 தொகுதிகளுக்கு நேற்றுக் காலை 8 மணி முதல் வாக்குப்பதிவு நடைபெற்றது. மாநிலத்தில் முக்கியமான சில தொகுதிகள் இந்தப் பட்டியலில் வரும் நிலையில், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் நேற்று வாக்களித்தனர். பிரதமர் நரேந்திர மோடி அஹமதாபாத்தின் ரானி பகுதியில் உள்ள நிஷான் பப்ளிக் பாடசாலையில் வாக்களித்தார். பிரதமர் வாக்களிப்பதற்கு முன்னதாக அவருக்கு முன்னால் மற்றொரு பெண்மணி வாக்களிக்க நின்று கொண்டிருந்தார். உடனே அப்பெண் பிரதமரைப் பார்த்ததும், ஒதுங்கி வழிவிட்டு நின்றார்.



ஆனால் இதனை ஏற்காத பிரதமர் "முதலில் நீங்கள் வாக்களியுங்கள்" எனும் தொனியில் கைகாட்டினார்.

இதனையடுத்து அப்பெண் வாக்களித்து முடித்த பின்னர் பிரதமர் மோடி வாக்களித்தார். இந்தச் சம்பவம் சுற்றியிருந்த வாக்காளர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதற்கு முன்னதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது குடும்பத்துடன் அஹமதாபாத் தொகுதியில் வாக்களித்தார். வாக்களித்த பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், "அனைவரும் வாக்களிக்க வேண்டும்.

குறிப்பாக முதல் தலைமுறை வாக்காளர்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். பின்னர் அருகில் இருந்த கோயிலில் அவர் குடும்பத்துடன் தரிசனம் மேற்கொண்டார். அதேபோல பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் வாக்களித்தனர்.

இதேவேளை பா.ஜ.கவுக்கு இந்தத் தேர்தல் முக்கியமான தேர்தலாகும். ஏனெனில் இந்தத் தேர்தலில் வெளியாகும் தேர்தல் முடிவுகள் 2024 நாடாளுமன்ற தேர்தலைப் பாதிக்கும். எதிர்வரும் 2025 இல் ஆர்.எஸ்.எஸ் தனது 100 ஆவது ஆண்டை பெரிய அளவில் கொண்டாட திட்டமிட்டிருக்கிறது. எனவே இதனை சாத்தியப்படுத்த மத்திய அரசில் பா.ஜ.க ஆட்சியில் இருக்க வேண்டியது அவசியம்.



அந்த வகையில் இத்தேர்தல் பா.ஜ.கவுக்கு மிகவும் முக்கியமான தேர்தலாகும். அதேபோல இந்த முறை வெற்றி பெற்றுவிட்டால் சி.பி.எம் சாதனையை பா.ஜ.க சமநிலைப்படுத்தி விடும்.

அதாவது மேற்கு வங்கத்தில் சி.பி.எம் தொடர்ந்து 7 முறை வெற்றி பெற்று ஆட்சி நடத்தியிருக்கிறது. இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுபோல வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவில்லை.

ஆனால் பா.ஜ.க குஜராத்தில் 1995 முதல் 6 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றிருக்கிறது.

எனவே இந்த முறையும் வெற்றி பெற்றால் சி.பி.எம் சாதனை சமன் செய்யப்படும்.

ஆனால், இம்முறை காங்கிரஸ் மட்டுமல்லாது ஆம் ஆத்மியும் களத்தில் இறங்கி இருப்பதால் மும்முனை போட்டி நிலவி வருகிறது. எனவே வாக்கு வங்கிகள் பிரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அன்னை மரியாளின் அமலோற்பவத் திருவிழா

**உலகெங்கிலும் டிசம்பர் 8ல் கொண்டாடப்படுகிறது**



திருச்சபையின் அன்னையும் நம் ஆண்டவரின் தாயாருமான அன்னை மரியாளின் அமலோற்பவப் பெருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை வருடந்தோறும் டிசம்பர் 8ஆம் திகதி சிறப்பாக கொண்டாடுகிறது.

இயேசு கிறிஸ்துவின் தாயாரான அன்னை மரியாள் அவரது தாயின் வயிற்றில் பாவமின்றி கருவானதைக் கொண்டாடும் விழாவாகவும் `மரியாள் ஜென்மப் பாவமின்றி பிறந்தார்' என்ற கருத்தை மையப்படுத்தும் விழாவாகவும் இந்த விழா அமைந்துள்ளது.

பொதுவான கிறிஸ்தவ நம்பிக்கையின்படி ஆதாம் ஏவாளால் தோன்றிய பாவம் மரபுவழியாகத் தொடர்ந்து உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையோடும் இணைந்து பிறக்கிறது.

இது ஜென்ம பாவம் அல்லது பிறப்பு நிலைப் பாவம் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய பாவம் மனிதரைக் கடவுளின் அருள் நிலையிலிருந்து பிரித்து உலகின் தீய நாட்டங்களுக்கு அடிமையாக்குகிறது.

நம் தந்தையாகிய கடவுள் உலக மீட்பரின் தாயாகுமாறு மரியாளைத் தேர்ந்தெடுத்தார். எனவேதான் மரியாளுக்கு மிகுதியான அருளைப் பொழிந்து பாவ மாசற்ற நிலையில் தாயின் வயிற்றில் கருவாக உருவாகச் செய்தார்.

அதுவே `மரியாளின் அமலோற்பவம்' என்று அழைக்கப்படுகிறது. மீட்பரின் தாயானதால் மீட்பின் பேறுபலன்கள் மரியாளுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டன.

அமலோற்பவம் என்பது மரியாள் பெற்ற பாக்கியம் என்று சொல்வதைவிட தனது மகன் இயேசுவின் பொருட்டு கடவுள் மரியாளுக்குக் கொடுத்த பேறு என்று சொல்வது மிகவும் பொருத்தமானது.

அன்னை மரியாளின் அமலோற்பவப் பெருவிழா தொடக்கத்தில் பல்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வந்தது. 1854ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் `மரியாளின் அமலோற்பவப் பெருவிழா' என்ற பெயரில் கொண்டாட அதிகாரபூர்வமாக அறிவிப்பு செய்தார்.

தான் எழுதிய இனெப்பிலிஸ் டியூஸ் (Ineffabilis Deus) என்ற மடலில் ``மனித குல மீட்பரான இயேசு கிறிஸ்துவின் பயன்களை முன்னிட்டு கன்னிமரி கருவான நொடிப்பொழுதிலேயே எல்லாம் வல்ல இறைவனது அருளாலும் சலுகையாலும்



ஜென்ம பாவ மாசுகள் எதுவும் அணுகாதவளாய்த் தோன்றினார்” என்று குறிப்பிட்டு அமலோற்பவியான கன்னி மரியாள் என்ற விசுவாசப் பிரகடனத்தை அறிவித்தார்.

திருத்தந்தையின் அந்த அறிவிப்பை உறுதிசெய்யும் வகையில் 1858ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து நகரில் பெர்னதத் என்ற 14 வயது சிறுமிக்குக் காட்சி கொடுத்த மரியாள் `நாமே அமலோற்பவம்' என்று அறிவித்தார். அன்றுமுதல் இன்றுவரை மரியாள் `அமலோற்பவி' என்பதை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் 8ஆம் திகதி மரியாளின் அமலோற்பவப் பெருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

பழைய ஏற்பாட்டில் தாவீது அரசன் ஆண்டவருக்காகக் கோயில் கட்ட நினைத்தபோது, ஆண்டவர் அவரிடம், ``நீ மிகுதியான குருதியைச் சிந்தினாய், பெரும் போர்களை நடத்தினாய்; எனக்கு முன்பாகத் தரையில் நீ மிகுதியான குருதியைச் சிந்தியதால், என் பெயருக்கு நீ கோயில் கட்ட வேண்டாம்” (1 குறி 22 :8) என்று தெரிவித்தார்.

தனக்குக் கோயில் கட்ட நினைப்பவரே தூய்மையாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் கடவுள், தன்னுடைய மகன் இயேசுவைப் பெற்றெடுக்க இருக்கும் பெண் எவ்வளவு தூய்மையாக இருக்க வேண்டும் என்று நினைத்திருப்பார்?

ஆதலால்தான் தன்னுடைய மகன் இயேசு பிறக்க பாவ மாசு அணுகாத மரியாளைத் தேர்ந்தெடுக்கிறார். அதற்காக அவர் மரியாளை ஜென்ம பாவத்திலிருந்து விடுவித்தார்; அவரை இறைவன் தங்கும் இல்லிடமாக மாற்றினார். இத்தகைய சிறப்புகளைக் கொண்டவளாக விளங்கியதால்தான் வானதூதர் கபிரியேல் கூட ``அருள் மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்முடனே” (லூக் 1: 28) என்று வாழ்த்தியிருக்கிறார்.

புனித அந்தோனியார் தன்னுடைய வாழ்வில் பல்வேறு சோதனைகளையும் இன்னல்களையும் சந்தித்து வந்தார். அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் அவர் மரியன்னையை நோக்கி இவ்வாறு மன்றாடுவார், `என் அரசியே... என் தாயே... என்மேல் கவனமாய் இரும்' என்று. இதனால் அந்தோனியார் இறப்பதற்கு ஒருசில நாட்களுக்கு முன்னர் மரியன்னை அவருக்குக் காட்சி

அருட்தந்தை
**மரிய அந்தோனிராஜ்...**

தந்து, `உன் நேர்மைக்கும் என்மீது நீ கொண்டிருந்த அன்புக்கும் விண்ணகத்தில் உனக்கொரு இடம் காத்திருக்கிறது' என்று சொல்லி மறைந்தார்.

மரியாள் மீது ஆழமான பக்திகொண்டு வாழும்போது, இறைவன் தன் அன்னை வழியாக நமக்கு எல்லா ஆசியையும் தருவார் என்பதே இந்த நிகழ்வானது நமக்கு எடுத்துரைக்கிறது.

எனவே, மரியாள் அமலோற்பவி என்ற விழாவைக் கொண்டாடும் இந்த வேளையில் மரியாளைப் போன்று நாமும் தூயோராக, மாசற்றவராக வாழ்வோம். ஆகவே மரியாவின் அமலோற்பவத்தை நினைவுகூரும் வேளையில் கடவுள் மரியாவுக்கு அளித்த மிகப்பெரிய பேற்றினை நினைவுகூர்வோம். மரியாள் தன்னுடைய மாசற்ற வாழ்வால் பாவத்தை வெற்றிகொண்டாள். நாமும் அவளைப் போன்றே மாசற்ற வாழ்வு வாழ்ந்து இறைவனின் கருணையைப் பெறுவோம்.




## சிலாபம் கட்டைக்காடு புனித சவேரியார் ஆலய திருவிழா



சிலாபம் மறைமாவட்டத்திலுள்ள கட்டைக்காடு புனித சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கடந்த நவம்பர் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்து டிசம்பர் முதலாம் திகதி வரை நவநாள் ஆராதனை, வழிபாடுகள் நடைபெற்றன. டிசம்பர் 2ஆம் மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றதுடன் 3ஆம் திகதி காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி பங்குத்தந்தை அருட்தந்தை வின்சன் ஜெயராசா தலைமையில் அருட்தந்தை அமிர்தராஜ் அடிகளாரின் பங்கேற்புடன் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியின் இறுதியில் புனித சவேரியாரின் திருச்சுரூப பவனி மற்றும் இறுதி ஆசீர்வாதம் இடம்பெற்றது. கட்டைக்காடு புனித சவேரியார் ஆலயம் சுமார் 160 வருடங்கள் பழமை வாய்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# திருவருகைக்காலம்

## வாழ்வின் பாதையை செம்மையாக்குவோம்



திருவருகைக் காலத்தின் இரண்டாம் வாரத்தில் நாம் அடியெடுத்து வைக்கின்றோம். இந்த வாரத்தில் தொடக்க நாளான ஞாயிறு வாசகங்கள் அனைத்தும் நாம் மனமாற்றம் பெற்ற மக்களாய் வாழ வேண்டுமென அழைப்பு விடுக்கின்றன.

நம்மில் பலர் திருவருகைக்காலம் மகிழ்வோடும் பரபரப்பாகவும் இருக்க வேண்டிய காலம் எனவும் தவக்காலம் துயரத்தோடும் ஒறுத்தல்களோடும் மாற்றங்களை உண்டாக்கும் காலமாக இருக்கவேண்டும் எனவும் எண்ணுகிறோம்.

ஆனால் அப்படியல்ல. திருவருகைக் காலமும் மனமாற்றத்திற்கு நம்மை அழைக்கும் காலம். ஆண்டவருடைய வருகைக்காக நாம் மகிழ்வோடும் பரபரப்போடும் காத்திருந்தால் மட்டும் போதாது. அவரை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் ஏற்க தகுதி உள்ளவர்களாக மாறுவது அவசியம்.நமது மனங்கள் கரடு முரடாய் இருப்பது அதற்கான தகுதியாக அமையாது.

மனமாற்றம் என்பது குறிப்பிட்ட தருணத்திலோ அல்லது நாட்களிலோ நிறைவுறுவதல்ல. மாறாக மனிதனின் வாழ்நாளின் இறுதி வரையிலும் நிகழக் கூடியது.

மனமாற்றம் என்பது நமது அடிப்படை எண்ணத்தில் ஏற்படக் கூடிய மாற்றம்.இம்மனமாற்றம் நேர்மறையாக நல்லவையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாறாக எதிர்மறையாகவும் தீயவையாகவும் இருந்தால் எமது முழு வாழ்க்கையும் அதனால் வீணாகிவிடும்.

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் திருமுழுக்கு யோவானின் மூலம் மனமாற்றத்திற்கான அழைப்பு அன்றைய யூதர்களுக்கு வழங்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம்.

பல்வேறு வகையில் தங்கள் சொந்த நாட்டிலேயே அடிமைப்படுத்தப் பட்டிருந்த இவர்கள் தங்களை மீட்க மெசியா வருவார் என ஆண்டாண்டு காலமாய் காத்திருந்தார்கள்.

ஆனால் அந்த காத்திருப்பு அர்த்தமுள்ளதாக அமையவில்லை.தங்களிடையே பல பிளவுகளும் அடக்குமுறைகளும் கொண்டு அவர்கள் வாழ்ந்தனர். சட்டங்களின் பேரில் ஏழைகள் அடிமைப் படுத்தப்பட்டனர். கடவுளிடம் உண்மையான அன்பும் பக்தியும் இல்லாமல் வெளிவேடக்காரர்களாய் வாழ்ந்தனர். இந்நிலை சில தலைமுறைகளாகத் தொடர்ந்தது.

இப்படிப்பட்ட சூழலில் தான் ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக மக்களே தயார் செய்ய இறைவாக்கினர்களுள் இறுதியானவராக இயேசுவின் முன்னோடியாக திருமுழுக்கு யோவான் மனமாற்றத்திற்கான அறைகூவல் விடுக்கிறார். அவருடைய வார்த்தைகள் கடினமானவையாகத்தோன்றினாலும் மக்களின் மனதில் நல்மாற்றத்தை விதைக்கக்கூடியதாக அமைந்தது.

அன்று யூதர்களுக்கு வழங்கப்பட்ட மனமாற்றத்திற்கான அழைப்பு இன்று நமக்கும் விடுக்கப்படுகிறது. கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்காக நம்மையே நாம் தயாரிக்கும் இவ்வேளையில் நமது வாழ்வென்னும் பாதை எவ்வாறு இருக்கிறது என நாம் சிந்தித்து மனம்மாற வேண்டும்.

பிளவுகளும் உலகின் மாயைகளுக்கு அடிமையாகும் நிலையும் உண்மையற்ற அன்பும் பக்தி என்னும் பெயரில் வெளிவேடத்தன்மையும் நிறைந்து நமது மனங்கள் கரடுமுரடாய் இருந்தால் ஆண்டவரை நம்மால் உரிய தகுதியுடன் வரவேற்க முடியாது. அதற்காக நாம் மனமாற்றம் பெற வேண்டும்.

நம் வாழ்வை செம்மைப்படுத்துவோம். கோடரியால் வெட்டப்படும் மரங்களாய் இல்லாமல் கனிகொடுக்கும் மரங்களாவோம். இந்த திரு வருகைக் காலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்.

அருட்பணி
**குழந்தை யேசு பாபு ...**

# குடும்பம்



குடும்ப வாழ்க்கை என்பது மகிழ்ச்சி, வேதனை, கடினமான சூழல் போன்றவற்றைக் கொண்டிருந்தாலும் குடும்பமாக ஒன்றிணைந்து இருப்பதில் உள்ளார்ந்த மகிழ்ச்சியைக் கொண்டுள்ளது என்ன பரிசுத்த பாப்பரசர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று வத்திக்கானின் புனித கிளெமெந்தினா அறையில் இத்தாலிய குடும்ப சங்கங்களின் உறுப்பினர்கள் 300 பேரை சந்தித்து கலந்துரையாடிய போதே பரிசுத்த பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

**உள்ளார்ந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடு**

குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகள், மகிழ்ச்சி, துன்பம், வருத்தம் போன்றவற்றைக் கொடுத்தாலும், நன்றியுணர்வின் வெளிப்பாடாக கடவுள் தரும் அன்பளிப்பாக குடும்பத்தின் மகிழ்ச்சி வெளிப்படுகின்றது.

கடவுள், முன்னோர், பெற்றோர் என அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கும் மகிழ்ச்சியின் இடமாக குடும்பங்கள் திகழ்கின்றன என்றும், அம்மகிழ்ச்சியில் நிலைக்க நிலையான மாதிரியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக மாதிரிகளைப் பின்பற்ற முயலாமல் எளிமையுடனும் பணியார்வத்துடனும் முன்னேற நாள்தோறும் முயற்சிக்க வேண்டும் என்றும் பரிசுத்த பாப்பரசு அவ்வமைப்பினரைக் கேட்டுக் கொண்டார்

அன்பை அடிப்படையாகக் கொண்ட குடும்பம் தனதுக் குடும்பத்தைப் போலவே அருகில், வீட்டிற்கு வெளியில் என்ன நடக்கிறது என்பதிலும் பிறரது நலனில் அக்கறை மற்றும் கவனத்தை செலுத்துவதிலும் வளர வேண்டும் என வலியுறுத்திய திருத்தந்தை, இவ்வாறு ஏற்படும் உறவு பிறரை வரவேற்கவும் ஆதரவு கொடுக்கவும் வழிவகை செய்யும் எனவும் கூறியுள்ளார்.

குடும்பமாக வாழ்தல் என்பது சான்றுள்ள வாழ்வு என்றும் அர்ப்பணத்துடன் பணி செய்ய நம்மை உருவாக்கும் இடம் என்றும் கூறிய திருத்தந்தை, வாழ்க்கைத்துணையினர் ஒருவர் மற்றொருவருடனும் குழந்தைகளுடனும், உரையாடலை மேற்கொள்ளவும் ஆலயத்திற்குக் குடும்பமாகச் செல்லவும் நேரம் ஒதுக்கி வாழ்க்கையை மகிழ்ச்சியாக செலவிடுமாறும் பரிசுத்த பாப்பரசர் கேட்டுக் கொண்டார்.

**மெரினா ராஜ்...**

## பலாலி விமான நிலைய...

நேற்று (05) பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையமான பலாலி சர்வதேச விமான நிலையமும் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆம் திகதி திறக்கப்பட்டது.

## USAID துணை நிர்வாகி...

விஜயத்தின் போது சிரேஷ்ட அரச மற்றும் சிவில் சமூகத் தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கையின் உணவுப் பாதுகாப்பு, விவசாயம், எரிசக்தி மற்றும் அரசியல் துறைகளில் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அவர் கலந்துரையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பொதுத் தேர்தல் விரைவில்...

தவறாக நாட்டை நிர்வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போராட்டத்தின் விளைவாக பதவியில் தொடர முடியாத நிலை ஏற்பட்ட போது, துரதிர்ஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட காரணங்களுக்காக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் குற்றம் சாட்டினார்.

இலங்கையில் ஒரு அரசாங்கம் உள்ளதா?, அந்த அரசாங்கம் என்ன? யார் எவருக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்? பொருளாதாரம் தொடர்பிலான அவர்களின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விகள் எழுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், பொதுத் தேர்தல் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும் எனவும் இதன்மூலம் யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை பின்பற்றி வருகின்றார் என தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் நம்பகத்தன்மை கடுமையாக கேள்விக்குள்ளாக்கப்பட்டதாகவும் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்த போது மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் தலைமறைவாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாடளாவிய நீதிமன்றங்களில் 10,94,912...

அவர் சபையில் தெரிவித்தார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவதற்காகவே ஐஸ்ரக போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பிலான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற துறைமுகங்கள்,கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,நீதி,சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த ஆறு மாத காலத்திற்குள் 27 சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதுடன் அவற்றில் 17 சட்டங்கள் நீதியமைச்சுடன் தொடர்புடையவை. பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையிலும் நாடு போதைப்பொருள் பாவனை மற்றும் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் நாட்டில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள்.ஐஸ் போதைப்பொருளுக்கு எதிரான கடும் சட்டம் உருவாக்கப்பட்டு,ஐஸ் போதைப்பொருள் பாவனை மற்றும் வர்த்தகம் தொடர்பான குற்றங்களுக்காக அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

சட்டத்தை முறையாக செயற்படுத்தும் தரப்பினர் ஊடாக கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் நீதிமன்ற வழக்கு நிறைவடைவதற்கு முன்னர் சமூகமயப்படுத்தப்படுகின்றமை பரதூரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது பாரதூரமான பிரச்சினையாகும். சில பொலிஸ் உத்தியோகத்தர்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளார்கள். நீதிமன்றங்களில் பல ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளுடன் தொடர்புடைய பழமையான சட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறைவு செய்யப்பட்ட 1653 ஆவணங்கள் நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அக் குடும்பங்களுக்கு இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை மேலும்3520 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளதுடன் 5246 குடும்பங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து தற்போது நாட்டுக்கு வருகை தந்துள்ள 11,780 பேர் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு நடமாடும் சேவை ஊடாக தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக்காக விசேட ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் மாதங்களில் ஒன்பது மாகாணங்களிலும் போதைப்பொருள் ஒழிப்புக்காக விசேட செயலணியை ஸ்தாபிக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் ஒழிப்பு செயலணி அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு பணிகளுக்காக 2700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் வாக்குறுதி... (03 ஆம் பக்கத் தொடர்)

மோசடிகள் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை.நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் இனவாதம்,ஊழல் மோசடிகள் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.சமஷ்டி முறை அரசியல் தீர்வுக்கு நாம் தயாராகவே உள்ளோம். அரசியல் தீர்வு வழங்க நாம் தயாராக இருந்தோம் எனினும் தமிழ்தரப்பு அது விடயத்தில் ஒத்துழைப்புடன் செயற்படவில்லை என அரசாங்கம் ஒருபோதும் குறிப்பிட்டு விடக்கூடாது. அதே வேளை, சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு நாட்டை பிளவுப்படுத்தாது என்ற உண்மையை அரசியல் தரப்பினர் நாட்டு மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பாராளுமன்றத்தின் மக்கள் ஆணை புதுப்பிக்கப்படும் ஆனால் தற்போதைய பாராளுமன்றம் மக்களாணையை இழந்துள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டு ஆட்சியமைத்த பொதுஜன பெரமுனவின் மக்களாணையும் சிதைவடைந்துள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினரைப் போன்று நீதியமைச்சர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். ஊழல் மோசடி தொடர்பிலும்,அரசியல்வாதிகளின் ஊழல் மோசடி தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான முறைப்பாடுகளை முன்வைப்பது நாட்டின் பிரஜைகளின் பொறுப்பேயன்றி அமைச்சரின் பொறுப்பல்ல, என்றார்.

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு...

மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க, காலி மாவட்டத்தில் நாகொட, களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, கேகாலை மாவட்டத்தில் எட்டியந்தோட்டை மற்றும் வரகாபொல மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி மற்றும் எலபாத்த ஆகிய பிராந்திய செயலகப் பிரிவுகளுக்கு இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மலைப்பாங்கான மற்றும் சரிவான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மண்சரிவு அறிகுறிகள் குறித்து அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## விடுமுறை தினங்களில் இனி...

தெரிவித்துள்ளது. வாரத்தில் குறிப்பிட்ட சில நேரங்களில் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகிறது.

இது தவிர சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்களில் பஸ்களில் பயணிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதால் இந்த நாட்களில் 50 சதவீத பஸ்களை சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக, பஸ்களுக்கு தினசரி வருமானத்தில் 35 சத வீதம் முதல் 40 சத வீதம் வரை எரிபொருளுக்காகச் செலவிடப்படுகிறது. இது தவிர, குறுகிய தூர பஸ்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு 3,500 ரூபா முதல் 4,000 ரூபா வரை செலவிடப்படுகிறது என்றும் அச் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியாக ரணில் தெரிவு...

தெரிவித்தார். அரசியல் செய்வதற்கும் தேவையான செயற்பாடுகளை சுதந்திரமாக செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். கட்சி பிளவுபட்டுள்ளதாக சில கட்சிகள் மத்தியில் கருத்துக்கள் இருந்தாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு போதும் பிளவுபடவில்லை எனவும் ஒரு சிலர் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும் கட்சி பிரதானமாக நாட்டு மக்களுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இன்னமும் தமது கட்சியின் தலைவராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், “வித்தியாசமாக சிந்தியுங்கள் – பயப்பட வேண்டாம்” என்பதே தமது கட்சியின் குறிக்கோள் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதற்கேற்ப சிலர் வித்தியாசமாக சிந்தித்து பழகி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தாம் அரசாங்கத்தில் இல்லாவிட்டாலும் அரசியலில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர், 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ள தடையினால் தாம் பாராளுமன்றத்திற்கு வருவதற்கு வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனினும் அது குறித்து மகிழ்ச்சியடைவதாக அவர் தெரிவித்துள்ளார். 69 இலட்சம் பேரின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அந்த பதவியிலிருந்து விலகி அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியொருவரை தெரிவு செய்திருக்க வேண்டும். அதன்படி பொருத்தமான நபரை தெரிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை வரவேற்பதாக அவர் தெரிவித்தார்.

## இலங்கை கிரிக்கெட்... (03 ஆம் பக்கத் தொடர்)

*பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். இதன்போது குறித்த மனுவை பெப்ரவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டது.*

## லிற்றோ Gas விலை...

*சிலிண்டரின் விலை 250 ரூபாவினாலும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 100 ரூபாவினாலும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 45 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

## எரிபொருள் விலையில் அதிரடி மாற்றம்...

நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் 1 லீட்டர் ஒட்டோ டீசலின் புதிய விலை 420 ரூபாவாகும். ஏனைய எரிபொருட்களின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை லங்கா ஐஓசி நிறுவனமும் ஒட்டோ டீசலின் விலையை 10 ரூபாவினால் குறைத்துள்ளது.

## 03 குடும்பங்களின் தேவைகளுக்காக...

நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், மேலதிக வாழ்வாதாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக கடலட்டைப் பண்ணைகளை கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தினை சேர்ந்த சுமார் 203 உறுப்பினர்களை விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சுயலாபத்திற்காகவும் குறுகிய நலனுக்காகவும் கடலட்டைப் பண்ணைக்கு எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

சுமார் 266 கடற்றொழிலார்களை உறுப்பினர்களாக கொண்ட கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தினால், நக்டா திணைக்களத்திற்கு 174 உறுப்பினர்களின் கடலட்டைப் பண்ணைக்கான விண்ணப்பங்கள் நக்டா நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. கிராஞ்சியில் வெளியாருக்கு அட்டை பண்ணை வழங்கப்படவில்லை அவ்வாறு வழங்கப்பட்டால் அதை நாம் எதிர்ப்போம்.

ஆனால் கிராஞ்சியில் போராட்டம் நடத்துபவர்கள் பிணாமிகளின் பெயரில் பண்ணைகளை அமைத்து விட்டு பண்ணை வேண்டாம் எனப் போராடுகின்றனர்.

## கொழும்பிலிருந்து யாழ் சென்ற...

*அதிகாலை 4.45 மணியளவில் கிளிநொச்சி, இரணைமடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிய வருகிறது. விபத்தில் 22 பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*வீதியில் இருந்த மாடுகளுடன் குறித்த பஸ் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*






## A/L மாணவர்களுக்கு ஜனாதிபதி...

*இவ்வேலைத்திட்டத்திற்கு, தகுதியுடைய மாணவ, மாணவிகளை விண்ணப்பிக்கக் கோரி ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கடந்த 30 ஆம் திகதி கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.*

*அதற்கமைய புலமைப்பரிசில் கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள், மாதாந்த குடும்ப வருமானமாக 75,000/ ரூபாவிற்கும் குறைந்தவராகவும், அரசாங்க பாடசாலையில் அல்லது எவ்வித கட்டணமும் அறவிடப்படாத பாடசாலையில் கல்வி கற்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் 2021 (2022) ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றியிருப்பதுடன் ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான முழுமையான தகுதியை கொண்டவர்களாக இருப்பது அவசியமாகும்.*

*இதற்கமைய ஒரு கல்வி வலயத்தைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படும்.*

*இது தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்கனவே கல்வி அமைச்சினால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அதிபரிடமிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று தமது குடும்ப பொருளாதார நிலைமை தொடர்பான கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பான ஜனாதிபதி நிதியத்தின் விளம்பரம் தேசிய நாளிதழ்களான “தினமின” மற்றும் “தினகரன்” ஆகியவற்றில் நேற்று (05) வெளிவந்துள்ளன. அதற்கான விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல்களை ஜனாதிபதி நிதியத்தின் www. Presidentsfund.gov.lk என்ற இணையதளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.*

## அடுத்த வருடம் முதல் ஓர் அலகு...

*ரூபா என்ற நிலையான கட்டணம் அறவிடப்பட வேண்டும். அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேரடி பண உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்பது தமது யோசனை என அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி நாட்டின்ல 67 இலட்சத்து 9 ஆயிரத்து 574 மின்சார வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும், ஓர் அலகிற்கு தற்போதையசராசரிகட்டணம்29.14ரூபாஅறவிடப்படுகிறது.*

*இதனால் 423.5 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.*

*030 அலகு தொகுதியில் 1,460,828 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 8 ரூபாவை செலுத்துகின்றனர்.*

*3060 அலகு தொகுதியில் 1,683,172 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 10 ரூபா செலுத்த வேண்டும்.*

*6090 அலகு தொகுதியில் 1,702,515 நுகர்வோர் உள்ளனர். ஓர் அலகு 'க்காக 16 ரூபாவை அவர்கள் செலுத்த வேண்டும். 90180 அலகு தொகுதியில் 1,559,131 நுகர்வோர் உள்ளனர் ஓர் அலகுக்காக 50 ரூபாவை செலுத்த வேண்டும். 180 மேற்பட்ட அலகு தொகுதியில் உள்ள 303,928 நுகர்வோர் ஓர் அலகுக்காக 75 ரூபாவை செலுத்துகின்றனர். எனவே இதில் சமநிலை இல்லாத நிலைமை இருக்கிறது.*

*இந்த நிலையில் அடுத்த வருடம் முதல் மின்சாரத்தின் ஓர் அலகுக்கான கட்டணத்தை 56 ரூபாய் 90 சதமாக அதிகரித்து, குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு நிவாரணம் வழங்க பரிந்துரைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்போது, கீழ் அடுக்கு (90 அலகுக்கு கீழ்) மின்சார நுகர்வோருக்கு அதிக அளவில் மானியம் வழங்கப்படும்.*

*இதில் ஒரு பகுதியை, அதிகளவில் மின்சாரத்தை நுகர்பவர்கள் செலுத்தும் மேலதிக தொகையை கொண்டும், மீதமானவை திறைசேரியினாலும் ஈடுசெய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.*

## விசேட தேவையுடையோருக்கு...

*தின தேசிய நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,*

*‘‘இந்நிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக இராஜாங்க அமைச்சருக்கும் செயலாளருக்கும் நான் குறிப்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் இப்போது இந்த அமைச்சின் அமைச்சராக இருந்தும் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவே அதன் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.*

*விசேட தேவையுடைய நபர்களிடம் தனித்துவமான திறமைகள் உள்ளன. அவர்களும் சமுதாயத்திற்கு சேவை செய்கிறார்கள். நெப்போலியனின் கடற்படையை தோற்கடித்த நெல்சன் பிரபு ஒரு கையை மட்டுமே கொண்டிருந்தார். உலகின் மிக சக்திவாய்ந்த அரசை அவரால் தோற்கடிக்க முடிந்தது. இன்று நாம் இசையைக் கேட்கிறோம். நடனத்தைப் பார்க்கின்றோம். உலகின் தலைசிறந்த மேற்கத்திய இசையமைப்பாளரான லுட்விக் வேன் பீத்தோவன் இசையை உருவாக்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் படிப்படியாக தனது செவித்திறனை இழந்தார்.*

*பின்னர், ஒரு கட்டத்தில் அவர் தனது செவித்திறனை முற்றிலுமாக இழந்து விட்டார். அந்த நேரத்தில் தான் அவர் சிறந்த இசையை உருவாக்கினார். அவர் மிகவும் பிரபல்யமடைந்தார். இன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தேசிய கீதம் இவரது இசையில் இருந்தே உருவாக்கப்பட்டுள்ளது.*

*அப்படியென்றால் இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு திறமையும் இயலுமையும் இருக்கிறது என்றே அர்த்தம்.*

*அந்தத் திறமையையும் இயலுமையையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*இதன் காரணமாகவே ஊனமுற்றோர்என்றபெயருக்குபதிலாகவிசேட தேவையுடையவர்கள் என்ற பெயரை உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தி எமது நாட்டின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.*

*அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பின்னர் இந்த அமைச்சின் பல துறைகளில் சில குறைபாடுகள் இருப்பதை நான் அறிந்தேன். குறிப்பாக குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவைப் பார்த்தால், அங்கும் சில குறைபாடுகளும் உள்ளன.இந்த துறையில் நாம் கவனம் செலுத்த தவறிவிட்டோம்.*

*சமுர்த்தி வேலைத்திட்டம் மூலம் இதற்கான அனைத்து நலன்புரி வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியுமென்றே நாம் எதிர்பார்த்தோம்.*

*எமது அனுபவத்தின்படி சமுர்த்தி வேலைத்திட்டமானது பொருளாதார வலுவூட்டுவதற்கு பொருத்தமானது. சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு உதவ முடியும். எனினும் இதனூடாக சுகாதாரம் மற்றும் ஏனைய சமூக நலச் செயற்பாடுகளில் கவனம் செலுத்த முடியாது.*

*எனவே அரசாங்கம் என்ற வகையில் இவ்வேலைத்திட்டங்களை திட்டமிட்டு முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். இன்று நமக்கு பணம் அவசியமாகியுள்ளது. இன்று நாம் பொருளாதார ரீதியில் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளோம்.*

*ஆனால் இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் வெளியே வரும் போது, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசாங்க செலவினங்களை மீண்டும் சீர்திருத்தம் செய்து மறுசீரமைக்க முடியும். அங்கு பொருளாதார வலுவூட்டல் மற்றும் இதர நடவடிக்கைகளுக்கு தனியான முக்கிய திட்டங்களை செயல்படுத்தக் கூடியதாக இருக்கும். இப்போது சமூக நலனுக்காக கூடுதல் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும்.*

*இதுபோல ஒவ்வொரு துறையிலும் புதிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.*

*அந்த திட்டத்தை நாம் இங்கே தொடங்குவோம். பிரதமர் தினேஸ் குணவர்தனவின் தலைமையில் இராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு ஆகியவற்றை இணைத்துக்கொண்டு விசேட தேவையுடையோரின் நலனுக்காக பிரிதொரு வேலைத்திட்டத்தை உருவாக்கி அதனை அமைச்சரவைக்கு சமர்பிக்குமாறும் நான் பிரதமரிடம் தெரிவித்தேன்.*

*அவர் இத்திட்டத்தை ஆரம்பித்து மிகக் குறுகிய காலத்தில் அறிக்கை சமர்பிப்பார் என்று நம்புகின்றேன். அந்த அறிக்கையின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டிற்குப் பிறகு வரும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்போம் என்று நம்புகின்றேன்.’’ என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.*

## வங்காள விரிகுடாவில்...

*மீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்காவின் புவியியல் அளவையியல் திணைக்களம் (USGS) தெரிவித்துள்ளது.*

*நேற்றுக் காலை 8.32 மணியளவில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை பங்களாதேஷின் டாக்கா நகரிலிருந்து 529 கிலோமீற்றர் தென்மேற்காகவும், கொக்ஸ் பஸார் நகரிலிருந்து தென் மேற்கே 340 கிலோமீற்றர் தொலைவிலும், சிட்டாகொங் நகரிலிருந்து 397 கிலேமீற்றர் தொலைவிலும் இப்பூகம்பம் மையம் கொண்டிருந்ததாக பங்களாதேஷின் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*நேற்று முன்தினம் ஞாயிறு இரவு வங்காள விரிவுடாவில், இலங்கையின் கல்முனை நகரிலிருந்து 270 கிலோமீற்றர் தூரத்தில் 38 கிலோமீற்றர் ஆழத்தில் 4.9 ரிக்டர் அளவிலான பூகம்பம் பதிவாகியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நேற்று காலை வங்காள விரிகுடாவின் வட பகுதியில் 5.1 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளது.*

*இப்பூகம்பம் சுனாமி அலைகளை உருவாக்கக்கூடிய அளவு சக்தி வாய்ந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை இந்தியாவின் அருணாச்சலம் பிரதேசத்தில் 3.3 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

## இ.போ.ச வின் தலைவரை உடன்...

கொழும்பிலிருந்து தெற்கு அதிவேகப் பாதையில் பயணம் செய்யும் மற்றும் அவிசாவளை ஹோமாகம மற்றும் அதை அண்டிய பிரதேசங்களில் இருந்து கொழும்பை நோக்கி பயணிக்கும் காரியாலய பணியாளர்கள் மற்றும் ஏனைய பயணிகள் தங்களுடைய வாகனத்தை பல் துறை மத்திய நிலையத்தில் நிறுத்திவிட்டு கொழும்பை நோக்கி பயணிக்கும் வசதி இதனால் வழங்கப்பட்டது.

இச்சேவை கொவிட் தொற்று காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் மீண்டும் அது போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் (15.07.2022) ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சேவை காரணமாக வாகன நெரிசல் மற்றும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் பெருமளவு குறைக்கபடக்கூடியதாக இருந்தது. ஆனால் இவ்வேளை திட்டத்தை இலங்கை போக்குவரத்து சபையின் மூலம் எடுக்கப்பட்ட முடிவின்படி அமைச்சருக்கு அறிவிக்காமல் திடீரென நிறுத்தியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அரசின் கொள்கை ரீதியான முடிவுகளின் பெயரில் மக்களுக்கு வசதிகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவது மற்றும் திறமையாக சேவையை நடத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை அலட்சியப்படுத்தியதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்சிலி ரணவக்கவை உடனடியாக பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு 2005 இலக்கம் 77 எனும் இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தின் முதலாவது பிரிவின் ஐந்தாவது சரத்தின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.அமைச்சரவையால் எடுக்கப்படும் முடிவுகளை பணிப்பாளர் சபை வேண்டுமென்றே செயல்படுத்தாமை இதற்கான காரணமாக அமைவதோடு அரசின் மக்கள் சார்பான இலக்குகளை நோக்கி நிறுவனத்தை கொண்டு செல்வதற்கு தங்களது பங்களிப்பை வழங்க முடியாமையுமே இந்த முடிவுக்கான காரணமாக காணப்படுகின்றன.

இதன்படி இலங்கை போக்குவரத்து சபை பணிப்பாளர் சபை மற்றும் தலைவர் பதவியில் இருந்தும் அங்கத்துவத்தில் இருந்தும் ராஜினாமா செய்யுமாறு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சரால் கிங்ஸ்லி ரணவக்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

**2021 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின், திருத்தப்பட்ட மாகாண சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 (எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66 (இ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

ஊவா மாகாண, மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய எம் எம் விஜேநாயக்க ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க மாகாண உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால், திருத்தப்பட்ட மாகாண உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 (எ) சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 66(இ) சட்டத்தின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, ஊவா மாகாணத்திலுள்ள லுணுகல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள தலைவர் பதவிக்கு புதிய தலைவரொருவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டமானது, 2022 டிசம்பர் 20 அன்று மு.ப.11.00 இற்கு லுணுகல பிரதேச சபை, லுணுகல என்ற முகவரியிலமைந்தள்ள, லுனுகல பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**2022 டிசம்பர் 05ஆம் திகதி**
**பதுளை, மாட்டின் சில்வா மாவத்தையிலுள்ள**
**ஊவா மாகாண, மாகாண உள்ளூராட்சி திணைக்களம்**

**எம்.எம்.விஜேநாயக்க**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**ஊவா மாகாணம்**

## வெற்று பாத்திரங்களை விலைக்கோரி விற்பனை செய்தல்

**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்**
**மாளிகாவத்தை, கொழும்பு-10**

ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வெற்று பிளாஸ்டிக் கேன்கள்/வெற்று சேலைன் போத்தல்கள்/ கார்ட்போர்ட்/பிளாஸ்டிக் போத்தல்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2023ஆம் வருடம்

கொழும்பு-10, மாளிகாவத்தை ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தில் சேர்ந்திருக்கும் மேற்கூறப்பட்ட உருப்படிகளுக்காக 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்தினுள் விற்பனை செய்வதற்காக 2022-12-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அன்றைய தினத்திற்கு முன் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறாப்பர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத 1,000.00 ரூபாவைச் செலுத்தி வழங்கல் பிரிவிலிருந்து தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(இது தொடர்பில் 011-2422335/011-2422336 நீடிப்பு 610 எனும் தொலைபேசியில் திரு.தீப்தி அவர்களைத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்)

**பிரதிப் பணிப்பாளர்,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**

திகதி 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4959
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,726,100.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 2 2 3 2 4 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.14,544,307.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3201
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,916,280.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 14 22 56 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,750,066.00

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1414
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,857,540.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 6 9 2 7 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,588,816.80

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 989
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,190,100.00
வெற்றி இலக்கினம் U வெற்றி இலக்கங்கள் 18 22 37 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 135,294,159.20

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 268
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,910,940.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 22 30 44 62
விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,537,800.00

**Mega POWER மெகா பவர்** கோடி 28+
சீட்டிழுப்பு இலக்கம் 1307
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,599,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.284,655,678.00
A 05 38 48 67 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

The Housewives' companion
Classifieds on
Daily News

## கேள்வி கோரல் அழைப்பு

### தனியார் பாதுகாப்புச் சேவை

**நுவரெலியா மாநகர சபை**

நுவரெலியா மாநகர சபைக்கு உரித்தான பொது ஆதனங்களிற்கு 2023 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக, தனியார் பாதுகாப்புச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்வி கோரல்

01. 2022.12.27 அன்று 10.30 மணிவரை பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து மேற்படி கருமத்திற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், நுவரெலியா மாநகர சபையின் மாநகர பொறியியலாளரிடம் (தொ.பே.இல.052-2223672) மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், வாரவேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியில் கேள்விப்படிவங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. கேள்விதாரர்கள் ரூபா ஐயாயிரம் மற்றும் முத்திரைக் கட்டணம் (5000+Stamp) மீளளிக்கப்படாத கட்டணத்தைக் காசாகச் செலுத்தி, மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துருவ விண்ணப்பமொன்றை, "மாநகர ஆணையாளர், மாநகரசபை, நுவரெலியா" என்ற முகவரிக்குச் சமர்ப்பித்து, 2022.12.06 முதல் 2022.12.26 அன்று 15.00 மணி வரை சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான கேள்விப்படிவத் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், 2022.12.27 அன்று 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு இரண்டு பிரதிகளில் கேள்விகள் ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக, அவ்வேளையில் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

04. இதற்காக கேள்விப்பிணையமொன்றாக காசாக ரூபா 365,500 (மூன்று இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து ஐந்நூறு) இச்சபையில் வைப்புச்செய்து, பற்றுச்சீட்டு அல்லது ரூபா 548,500.00 (ஐந்து இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து ஐநூறு) பெறுமானத்திற்கான, அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதும் 2023.03.01 முதல் முன்வரும் 14 நாட்களிற்குச் செல்லுபடியாகும் கேள்விப்பிணைச் சான்றிதழொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் சபைக்கு உரித்தாகும்.

**மாநகர ஆணையாளர், மாநகர சபை**
**நுவரெலியா - தொ.பே.இல: 0522222275.**

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

**2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்**

**பிரதான அலுவலகம் - கொழும்பு, பிராந்திய அலுவலகம் - பன்வில, மாத்தளை, கண்டி, ஹல்துமுல்ல மற்றும் காலியில் அமைந்துள்ள தோட்டங்களுக்கு**

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் கொள்வனவாளர்களை எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள், பிரசித்த வழங்குநர்கள் மற்றும் கொள்வனவு நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) பொருட்கள் வழங்குதல்**
அலுவலக காகிதாதிகள்
அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் (மேசைகள், கதிரைகள், உருக்கு அலுமாரிகள், பெட்டகங்கள்)
அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள் (கணனிகள், மின் பிறப்பாக்கிகள், தொலைநகல், அச்சு மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ஏனைய மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள், சுடுநீர் ஹீட்டர்கள், நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் துணைப்பாகங்கள்)
மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெட்டறிகள் மற்றும் ஏனைய பாகங்கள்)
பொதி செய்யும் பொருட்கள் (கன்டெய்னர்கள், சாக்குகள், காகித உறைகள், மெட்டலயிஸ் உறைகள், சொலோபோன் மற்றும் அலுபொயில் உறைகள் மற்றும் ஏனைய பொதி செய்யும் பொருட்கள்)
பாரம் நிறுக்கும் தராசுகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
துப்புரவேற்பாட்டு துணைப்பொருட்கள் மற்றும் பொருட்கள்
தேயிலை மற்றும் தொழிற்சாலைகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
விவசாய உபகரணங்கள், உரம் மற்றும் டொலமைட்
இரசாயனப் பொருட்கள், கலைநாசினிகள்
வீட்டு உபகரணங்கள் (தோட்ட விடுதிகள் மற்றும் பங்களாக்களுக்கு)
வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள்

**(2) சேவைகள் வழங்குதல்**
அச்சு வேலைகள் (காகிதாதிகள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (வாகனங்கள் /கராஜ்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (மின்னியலாளர்கள் / மின்னியல் நிறுவனங்கள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (கட்டிடங்கள் மற்றும் அலுவலக தளபாடங்கள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (அனைத்து வகையான தராசுகள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (தேயிலைத் தொழிற்சாலை இயந்திராதிகள்)
ஏனைய உற்பத்திகள்
அலுமினியத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் நிர்மாணங்கள்
அளத்தல் மற்றும் டெலிமெட்ரி வேலைகள்
துப்புரவேற்பாட்டு சேவை வழங்குநர்கள்
போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான சேவை வழங்குநர்கள்
இணையதள வடிவமைப்பாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்
தேயிலைக் கன்று வழங்குநர்கள்

**(3) விற்பனைகள்**
மரமாகப் பாவிக்கப்படும் பெறுமதியான தாவரங்கள் மற்றும் ஏனைய மரத் தாவரங்கள்
உடைந்த பொருட்கள்
மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள்
சிறிய ஏற்றுமதிப் பயிர்கள்
கழிவுத் தேயிலைகள்
தேயிலைக் கொழுந்து

**நிபந்தனைகள்**

பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 3000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அந்த உருப்படியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். சகல விண்ணப்பப் படிவங்களுடனும் அந்தப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு நிறுவனத்திடமுள்ள தகைமைகள், பதிவுச் சான்றிதழ் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு இதற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கிய நிறுவனங்களின் தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொதுவாக பொருட்கள் மற்றும் சேவை வழங்குவதற்காக விலைகளைக் கோரும் பொருட்டு வழங்குநர்களின் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப்படும் என்பதுடன் அவ்வாறே ஏனைய வெளி வழங்குநர்களிடமிருந்து கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொள்வனவு செய்யும் உரிமையை கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

சகல விண்ணப்பப் படிவங்களும் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' என இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கடித உறையில் இட்டு பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா வீதி, கொழும்பு 12 எனும் முகவரிக்கு 2023-02-28ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் 2022-12-12ஆம் திகதி வரை இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கல்பிஹில்ல பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்படும்.

கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களை காரணம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

தேவையான தகவுத்திறனை பூர்த்தி செய்யும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் பின் மட்டுமே கொடுப்பனவுகள் செய்யப்படும் என்பதுடன் கட்டணம் செலுத்துவதற்கு ஒரு மாத நிவாரண காலத்தை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு -12.**

**தொலைபேசி: 0115-921463**

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பதவி வெற்றிடம்

### இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

**தொழில்நுட்பவியல் அமைச்சு**

**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காகதகைமையுள்ள இலங்கைபிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**சிரேஷ்டபிரதிப் பணிப்பாளர் பதவி - சிரேஷ்ட முகாமையாளர் வகுதி (ஏச்எம் 1-1)**

### சிரேஷ்டபிரதிப் பணிப்பாளர் பதவி (உள்ளககணக்காய்வாளர்)

**தகைமைகள்:**

**வெளிவாரி:**
இலங்கைபல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டகணக்கியல்/ வர்த்தகம்/ நிதியியல் முகாமைத்துவம்/ வியாபாரநிருவாகம் - விஷேட பட்டம் (நான்குவருடங்கள்) ஆகியவற்றில் பெற்ற இளமாணிப் பட்டம் அல்லதுவகுப்பொன்றுடன் (மூன்றுவருடங்கள்) பொதுவான இளமாணிப் பட்டம்

**அத்துடன்**
இலங்கைபல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டகணக்கியல்/நிதியியல் முகாமைத்துவம்/ வியாபாரமுகாமைத்துவம் /வியாபாரநிருவாகம் ஆகியவற்றில் பெற்ற பட்டப்பின் முதுமாணி அல்லதுபதவியின் பாடப் பிரதேசத்திற்குஉரித்தானஅங்கீகரிக்கப்பட்டதொழில்சார் பட்டயநிறுவனமொன்றின் பட்டயஅங்கத்துவம்.

**மேலேயுள்ள பதவிக்கான அனுபவம்:**
முதலாம் பட்டத்திற்குப் பின்னர், கூட்டுத்தாபனமொன்றில்/நியதிச் சட்ட சபை/நிறுவனம் அல்லதுபுகழ் வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவமட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருடஉரித்தானஅனுபவம்.

**உள்ளக (கீழேயுள்ள 01 இல் அல்லது 02 இல்)**

01. மேலேயுள்ளவெளியகஅபேட்சகர்கருக்கு தேவைப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்.
02. இலங்கைபல்கலைக்கழகஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டகணக்கிடல்/ நிதியிடல் முகாமைத்துவம்/ வியாபாரமுகாமைத்துவம் ஆகியவற்றில் பெற்றபட்டப்பின் பட்டம் (முதுமாணி)அல்லதுபதவிக்குரித்தானபாடப் பிரதேசத்திற்குஉரித்தானதொழில்சார் பட்டயம் பெற்றநிறுவனத்தின் பட்டயம் அங்கத்துவம் அத்துடன் பதவிக்குதொடர்பானதுறையில் முகாமையாளர் வகுதியில் 13 வருடஅனுபவம்.

தெரிவுசெய்யப்பட்டஅபேட்சகருடன் பிரிவின் மேற்பார்வையிடல் பாங்கானதுநடைபெறும். அவர் (ஆண்/பெண்) அனைத்துமட்டங்களிலுமுள்ளபதவிநிலைஅலுவலர்களுடன் நல்லுறவைவளர்ப்பதற்காகமிகச்சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
80,295.00 – 15 x 2,270 இலங்கை ரூபா– 114,345 இலங்கை ரூபா.

**வயது:**
35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும் (உள்ளக அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது)

**ஏனைய நன்மைகள் :**
1. பிஈடி 1/2015 மற்றும் பிஈடி 1/2015(i) ஆகிய அரச தொழில் முயற்சி சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிருணயிக்கப்பட்ட வாகனம் அல்லது போக்குவரத்து பணக்கொடுப்பனவு.
2. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறைகளுக்கான பணக்கொடுப்பனவு.
3. வாழ்க்கை காப்புறுதி செயற்பாடு மற்றும் மருத்துவ காப்புறுதி செயற்பாடு.
4. வரையறுக்கப்பட்டலுக்கு உட்பட்டதாக மருத்துவ செலவினங்களுக்கான மீள்நிரப்பல்.
5. பொதுதிறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஊக்க பணக்கொடுப்பனவு.
6. தொழில் வாய்ப்புடைய சூழலில் வேலை செய்வதற்கான சந்தர்ப்பமொன்று.
7. தொழில்சார் படிகள்
8. தொடர்பாடல் படி.

முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏதாவது உரித்தான விபரங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளடங்கிய விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2022.12.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வந்தடையும் வகையில் பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிரதேசம், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் அவர்தம் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்**

# கிழக்கின் குரல்



## வவுணதீவு வலையிறவுப் பாலத்தின் ஊடான பாதுகாப்பான பயணத்துக்கு உதவ வேண்டுகோள்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பில் இருள் சூழ்ந்து காணப்படும் வவுணதீவு வலையிறவுப் பாலத்தில் மின் விளக்குகள் மற்றும் இரு புறங்களிலும் பாதுகாப்பு அரண்களைப் பொருத்தி தாம் பாதுகாப்பாகப் போக்குவரத்துச் செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கைச் சேர்ந்த மக்கள், பிரதானமாகப் பயன்படுத்தி வரும் வலையிறவு வவுணதீவுப் பாலமானது, மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்குட்பட்டதாகும். இப்பாலத்தினூடாக தினமும் 25,000 க்கும் மேற்பட்டவர்கள் பயணிக்கின்றனர்.

மழைக் காலத்தில் இப்பாலமானது நீர் சூழ்ந்து காணப்படுவதால், மிகவும் சிரமத்துடன் தங்களது பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் இப்பாலத்தினூடாக போக்குவரத்துச் செய்வது மிக மோசமாகக் காணப்பட்டாலும், வேறு பாதையொன்று இல்லாமையால், இப்பாலத்தினூடாகவே தாம் பயணிக்க வேண்டியுள்ளதாகவும், பொதுமக்கள் தெரிவித்தனர்.

தற்போது மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும், இப்பாலத்தில் மின் விளக்குகள் பொருத்தப்படாதுள்ளதாகவும், பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பாலத்தை மட்டக்களப்பு மாநகர சபை இன்னமும் கவனிக்காமல் உள்ளமையானது, மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

ஆகவே, இப்பாலமானது பாதுகாப்பான முறையில் அபிவிருத்தி செய்யப்படுமாயின் தாம் மிகவும் நன்மையடைய முடியுமெனத் தெரிவித்த பொதுமக்கள், இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு இப்பாலத்தினூடாக தாம் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு வழி செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## காரைதீவு பிரதேச சபையின் பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றம்



**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு பிரதேச சபை அமர்வின் போது, எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கான ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் 58ஆவது மாதாந்த அமர்வு, சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

இதன்போது 9 உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன், அடுத்த வருடத்துக்கான புதிய வரவு செலவுத் திட்டத்துக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளித்தனர். இதற்கமைய, எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கான காரைதீவு பிரதேச சபையின் ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வமர்வில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த போது, உப தவிசாளர் ஏ.எம்.ஜாகீர் மற்றும் உறுப்பினர்களான ஏ.எல். ஜலீல், கே.ஜெயதாசன் ஆகியோர் சமூகமளிக்கவில்லை.

இதேவேளை, சபை அமர்வின் இறுதி நேரத்தில் உப தவிசாளர் ஜாகீர் சமூகமளித்தார்.

## அக்கரைப்பற்று கடற்கரையை அழகுபடுத்தும் நடவடிக்கை



**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தை துப்புரவு செய்து அழகுபடுத்தும் பணியில் சமூக சேவா அமைப்புகளின் உதவியுடன் அக்கரைப்பற்று சன்ரைஸ் விளையாட்டுக் கழகத்தினர் ஈடுபட்டனர்.

கடந்த 6 வருடங்களாக இக்கடற்கரையை துப்புரவாக்கும் பணியில் சன்ரைஸ் விளையாட்டுக் கழகத் தொண்டர்கள் ஈடுபட்டு வருவதுடன், ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது சனிக்கிழமை தோறும் இக்கடற்கரையில் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலையில், கடந்த 3ஆம் திகதியும் இக்கடற்கரையில் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

தமது ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக இக்கடற்கரைக்கு வரும் பொதுமக்கள், கடற்கரையில் கழிவுகளை வீசி மாசு படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்வதாக, சன்ரைஸ் விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கலைச் சங்கமம் – 2022 நிகழ்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் பெருமையுடன் நடத்திய கலைச் சங்கமம் 2022 நிகழ்வு மிகவும் கோலாகலமாக நடைபெற்று முடிந்தது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் கடந்த 02ஆம் திகதி இந்நிகழ்வு நடைபெற்றது.

பாரம்பரிய இசை முழங்க அதிதிகள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இதன் பின்னர் மங்கல விளக்கேற்றலுடன், தமிழ்த் தாய் வாழ்த்தும் மாவட்ட செயலக கீதமும் இசைக்கப்பட்டு பிரதான அரங்க நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.



மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டிலும் வாள் நடனம், பாஞ்சாலி துதிக்கரம், வில்லுப்பாட்டு, றபான், நடனம், கஸீதா, பந்தாட்டம், பல்கலாசார நடனம், கிராமிய இசை, நாடகம், வில்லுப்பாட்டு, உடுக்கிசை, நவீன கூத்து, கிராமிய நடனம் உட்பட சில கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.

அத்துடன், இந்நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக அழைக்கப்பட்ட கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி, ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன், காத்தான்குடி மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம்.எம்.மஃரூப் கரீம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். மேலும், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் சிறந்த சேவையை பாராட்டி அவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது.

## களுதாவளை ம.வி மாணவர் 51 பேருக்கு பல்கலை அனுமதி

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

அண்மையில் வெளியாகிய பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலயத்திலிருந்து 51 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத் தெரிவுக்கான அனுமதியைப் பெற்றுள்ளதாக, அப்பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இந்நிலையில், விஞ்ஞானப் பிரிவில் 8 மாணவர்களும், வர்த்தகப் பிரிவில் 12 மாணவர்களும் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் 14 மாணவர்களும் உயிர்முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவில் 10 மாணவர்களும் கலைப் பிரிவில் 7 மாணவர்களுமாக, 51 பேர் இவ்வனுமதியைப் பெற்றுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## நிந்தவூரில் நிர்வாக சபை தெரிவு



**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

கரையோர மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வமைப்பின் தலைவராக ஏ.சி. அன்வர், உப தலைவராக வி.சிறிநாதன், செயலாளராக ஏ.பி.எம். இக்றாம், உப செயலாளராக என். கிருபாகரன், பொருளாளராக நளீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நிந்தவூரில் அப்துல் ஹமீத் பங்குபற்றிய இளைஞர் மாநாடு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர் வழிகாட்டல் மாநாடொன்று, கல்முனை வலய நிந்தவூர் கமு/கமு/அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூரின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட இம்மாநாட்டில் சர்வதேச அளவில் புகழ் பெற்ற ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டார்.

இதன்போது, மறைந்த அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்பிரியின் அறிவுக்களஞ்சியம் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## போதைப்பொருள் தடுப்பு செயலமர்வு



**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வொன்று, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

இதன்போது, சமகாலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சவாலாக அமைந்துள்ள போதைப்பொருள் பாவனை, அதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஏற்படும் தாக்கம், போதைப்பொருள் பாவனையால் குடும்பங்களில் ஏற்படும் பின் விளைவுகள்,போதைப்பொருள் பாவனையால் சிறைச்சாலையில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இச்செயலமர்வில் பிரதான வளவாளராக மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் கலந்துகொண்டு விளக்கமளித்தார்.

## மட்டக்களப்பில் நூல் வெளியீடு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும் சுவிட்ஸர்லாந்துக்கு புலம்பெயர்ந்து நாட்டில் தமிழ் இலக்கியத் தளத்தில் இயங்கி வருபவருமான சண். தவராஜாவின் 'மனுஷி' சிறுகதை நூல் வெளியீடும் அறிமுக நிகழ்வும் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை, இலக்கிய நிகழ்வின் 47ஆவது தொடராக நாளை காலை 10 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இதற்கான நிகழ்வு நடைபெறவுள்ளது.

பிரபல இலக்கியவாதியும் படைப்பாளியுமான பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், புலம்பெயர் மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ளவர்கள் கலந்துகொள்ள முடியும். Zoom தொழில்நுட்பம் வாயிலாக Zoom ID. 8997230363 மூலம் நிகழ்வில் இணையலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொத்துவிலில் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை

**காரைதீவு குறூப் நிருபர்**



பொத்துவில் பிரதேச செயலகத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்கொன்று நடத்தப்பட்டதுடன், அவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கை பொத்துவில், லாகுகல பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தின.

இதன்போது அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பான நடவடிக்கைகள், புதிய பாடத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

இதில் பொத்துவில், லாகுகல அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் இரத்ததான முகாம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவி வரும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மாபெரும் இரத்ததான முகாமொன்று மட்டக்களப்பில் நடத்தப்பட்டது.

'உதிரம் கொடுத்து உயிரை காப்போம்' எனும் தொனிப்பொருளில் உளவியல் ஆலோசனை மையத்தின் ஏற்பாட்டில் கடந்த 3ஆம் திகதி நடத்தப்பட்ட இந்த இரத்ததான முகாமில், அதிகளவிலான இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் அளித்தனர்.

இதன்போது, மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் வருகை தந்து குருதிக் கொடையாளர்களிடமிருந்து இரத்த மாதிரிகளை பெற்றுக் கொண்டனர்.



## உப்புவெளி உணவகங்களில் சோதனை; பாவனைக்குதவாத உணவுகள் அழிப்பு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்தில் இரவு வேளைகளில் இயங்கும் உணவு விடுதிகளில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மனித பாவனைக்கு பொருத்தமில்லாத உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக, உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சையொழிபவன் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு வாரத்தையிட்டு திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து உணவகங்களிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், உப்புவெளி பிரதேசத்திலுள்ள உணவகங்களிலும் கடந்த 3ஆம் திகதி இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், உப்புவெளி பிரதேசத்திலுள்ள 2 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.



# பொருட்கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-108

**2023 ஆம் ஆண்டிற்காக தீர்வு முகவர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பொருட்கொள்வனவுக் குழுத் தலைவரினால் 2023ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் சுங்க தடைகளை நீக்கி இறக்குமதி செய்யப்பட்ட இடத்தில் இருந்து அரச அச்சகத்திற்கு கொண்டுவந்து சமர்ப்பிப்பதற்காக தீர்வு முகவர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

**Bid Reference No : SI 2023/01**

**Bid Name : Clearing and Forwarding of Imported Cargo for the Year – 2023**

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.12.27 பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலை மனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00தை செலுத்தி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு முந்திய தினம் வரையில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ் காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு விநியோகப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கள் உள்ளடங்கிய மூடப்பட்ட கடித உறைகளை "Tender Box Foreign Supply என குறிக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் 2022.12.27 திகதி அல்லது அதற்கு முன்பாக இடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை, கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் வெளிநாட்டு விநியோகப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**திணைக்களத்தின் பொருட்கொள்வனவுக் குழுத் தலைவர்**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி:011-2694898, 0112691880**
**இணையதளங்கள்:www.documents.gov.lk**
**2022.12.01**

## அறிவித்தல்

கோவின்ன பின்ஸீன் பெருந்தோட்ட ஸ்ரீ முருகன் கோவிலின் வருடாந்த பொதுக் கூட்டமானது 2022 டிசம்பர் 16 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு களுத்துறை, போம்புவள, ஸ்டான்டர்ட் இன்டஸ்ரீஸ் (பிறைவட்) லிமிட்டட் இல் நடைபெறும்.

**தலைவர்**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/08/2022 | 02/09/2022 | 28/12/2022 & 03/01/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் குளிரூட்டி பராமரிப்பு, சலவை சேவை செய்வதற்கான கேள்வி கோரல் 2023

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | NP/DGH KOC/2022/ ASA/01 | Maintenance & services of Air Conditioner – 118 Nos | Business Registration & CIDA Registration EM5 or above | 50,000.00 | 22.02.2023 |
| 02 | NP/DGH KOC/2022/ LSA/02 | சலவை சேவை | கேள்விப் பத்திரத்தில் குறிப்பிட்ட தகைமைகள் | 50,000.00 | 22.02.2023 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 06.12.2022ம் திகதியிலிருந்து 20.12.2022 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 21.12.2022 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல0212285329 ,0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (22.02.2023) வரையும் செல்லுபடியாகும்.
7. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 14.12.2022 திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

## இல.84

## குடியியல் நடவடிமுறைக்கோவையின் பிரிவு 14A ன் கீழாக சட்டப்பிரதிநிதியை நியமித்து வழக்கினை கொண்டு நடாத்துவதற்கான அறிவித்தல் படிவம்

குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 14A ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் இதற்காக அட்டவணையில் விபரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்து தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான/மரணசாசன அதிகாரப் பத்திரத்துக்கான/மரணசாசன நிருவாகப்பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி மரணசாசன பத்திரத்தின் அல்லது விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரணசாசன நிர்வாகப்பத்திரத்தின் அளிப்புக்கென மரபுரிமையாண்மைச் சான்றிதழொன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்காக மனுதாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் மீது ஆட்சேபனையுடையவர்கள் ஆட்சேபனை, சத்தியக்கடதாசி ஆதாரத்துடனான எழுத்து வடிவிலான மாவட்ட நீதிமன்றில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

**அட்டவணை**

**மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம்**

**ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான இறுதித் திகதி**

| நிரை I | நிரை II | நிரை III | நிரை IV |
|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. | இறந்தவரின் பெயரும் விலாசமும் | இறந்தவர் இறுதி விருப்பாவணம் விட்டுச் சென்றாரா | விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் |
| SPL/2866/21 | மயில்வாகனம் மகேஸ்வரன், இல.18/4, விநாயகர் வித்தியாலய வீதி, கல்லடி, மட்டக்களப்பு | இல்லை | பாலசுப்ரமணியம் சந்திரசேகரம், இல.380/2, கங்காணிப்பிள்ளையார் கோவில் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு |

**திகதி - 2022/11/28**

**பதிவாளர் / மரணசாசன அலுவலர்**
**மாவட்ட நீதிமன்றம், மட்டக்களப்பு**

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை – 2022

**நேர அட்டவணை**

| திகதி | பாடம் | நேரம் |
|---|---|---|
| 18 டிசம்பர் 2022 ஞாயிறு | **வினாப்பத்திரம் II** (பல்தேர்வு, சுருக்க விடைகள் வழங்கும் 60 வினாக்கள்) | **09.30-10.45 மணி** காலம் - ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் |
| | **வினாப்பத்திரம் I** (மூன்று தெரிவுகள் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 40) | **11.15 -12.15 மணி** காலம் - ஒரு மணித்தியாலம் |

மேற்படி பரீட்சை 18 டிசம்பர் மாதம் 2022ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2894 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளினதும் வரவு இடாப்பு உரிய பாடசாலை அதிபர்களுக்குத் தபாலில் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. இதுவரையில் இவ் வரவு இடாப்பு ஆவணம் கிடைக்கப்பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் அவ் ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

இப் பரீட்சைக்கு நிகழ்நிலை முறைமையின் மூலம் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் விவரங்களடங்கிய அச்சுப்பிரதியுடன், வேண்டுகோள் கடிதமொன்றையும் இணைத்து இத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு உடனடியாக வருகைதந்து அவ் ஆவணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**தொடர்புகள் :-**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி இலக்கம்** | : | **011-2784208, 2784537, 2786616** |
| **அவசர அழைப்பு இலக்கம்** | : | **1911** |
| **தொலைநகல் இலக்கம்** | : | **011-2784422** |
| **தபால் முகவரி** | : | **பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல.** |

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/5/புலமைப்பரிசில்/2022**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை பத்தரமுல்ல.**
**2022.12.06**






# கெக்கிராவ பிரதேச சபை

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022.12.30 பி.ப. 3.00 இற்கு முடிவுறும். அன்று அல்லது அதற்கு முன் செயலாளர்/ தலைவர், கெக்கிராவ பிரதேச சபை, கெக்கிராவ என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023ஆம் ஆண்டு என்று குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### பொருட்களை வழங்குதல்

1. அலுவலக அலுவல்களுக்கு தேவையான காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்
2. அலுவலக அலுவல்களுக்கு தேவையான இயந்திராதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் (கணனி, போட்டோ பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், தட்டச்சு, அச்சு இயந்திரங்களை வழங்குதல் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்)
3. மேசை, கதிரை, அலுமாரி, கோவை கெபினெட் போன்ற அலுவலகத் தளபாடங்கள்
4. மின்சார உபகரணம் மற்றும் வீதி விளக்குகள் வழங்குதல்
5. வாகனங்களுக்குத் தேவையான டயர், டியூப் மற்றும் உதிரிப்பாகங்கள்
6. போட்டோ பிரதி இயந்திரம், கணனி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரத்திற்கான தீந்தை, டோனர் வகை, ரிப்பன், CD, DVD போன்றன
7. கட்டிடப் பொருட்கள் மற்றும் ஹார்ட்வெயார் உருப்படிகள் (ஓடு, சீமெந்து, இரும்பு, மண்வெட்டி, வீச்சுக்கத்தி, கத்தி, தீந்தை, முற்கம்பி, எஸ்பெஸ்டஸ் போன்றன)
8. வீதி அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் பிரிவிற்கு தேவையான பொருட்கள் (சிப் கல், கருவிகள், சரளைக்கல், மணல், மண், செங்கல், மரம், தார்)
9. துப்புரவேற்பாட்டு சேவைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (சவர்க்காரம், கிருமிநாசினி, கம்பூட்ஸ், கையுறை, குப்பை பெட்டிகள், விளக்குமாறு, தும்புத்தடி, மொப், குடை, ரேக்கை விளக்குமாறு ரேக்கை)
10. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் முன்பள்ளி உபகரணங்கள்
11. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் நீர்மானி
12. ஹியூம் பைப், கொங்கிறீட் கம்பி தூண் உட்பட கொங்கிறீட் உற்பத்திகள்
13. சீருடைக்கான துணி வழங்குதல்
14. சைக்கிள் மற்றும் வண்டி அனுமதிப் பத்திர தகடு
15. பாதுகாப்பு உபகரணங்கள் (பாதுகாப்பு ஆடைகள், பாதுகாப்பு ஹெல்மட், பாதுகாப்பு கையுறை மற்றும் பாதணிகள், மழை அங்கி)
16. விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் உரம்
17. ஒலிபெருக்கி உபகரணம், கெமரா, புரஜெக்டர், பாதுகாப்பு கெமரா, வீடியோ உபகரணம், தொலைக்காட்சி, டேப் ரெக்கோடர் வழங்குதல்

### சேவை வழங்குதல்

1. அச்சக சேவைகள் (ஓப்செட், டிஜிட்டல் மற்றும் அச்சு தயாரித்தல்)
2. உணவு பானங்கள் வழங்குதல் (சிற்றுண்டி மற்றும் சுவையுணவு)
3. அலுவலக அடையாள அட்டை தயாரித்தல்
4. அலுவலக இயந்திராதிகள் பழுதுபார்த்தல் (தட்டச்சு இயந்திரம், அச்சு இயந்திரம், கணனி, போட்டோ பிரதி இயந்திரம்
5. ஸ்டிக்கர், பதாகை
6. கட்டிடம், வீதி நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சத்திற்கு மேல்
7. கட்டிடம் வீதி நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சத்திற்கு கீழ்
8. தச்சு வேலை, மேசன் வேலை, நீர்க்குழாய் தொழில்நுட்ப சேவை
9. ஹாட்வெயார் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
10. சகல வகையான டீசல் மற்றும் பெற்றோல் வாகன இயந்திர பழுதுபார்த்தல் விடயங்கள் மற்றும் சேர்விஸ் செய்தல்
11. வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் (வீதி அழுத்தி, டோசர் இயந்திரம், எஸ்க்கவேட்டர் இயந்திரம், மோட்டர் கிரேடர், நீர் பவுசர்)
12. ஒலிபெருக்கி இயந்திரம், உற்சவப் பொருட்கள் வாடகைக்கு வழங்குதல்
13. சட்டத்தரணி சேவை வழங்குதல்
14. நில அளவையாளர் சேவை வழங்குதல்
15. கட்டிட வரைபட வரைதலுக்கான வரைபடக் கலைஞர்கள்
16. நீர்க்குழாய் மோட்டர் பழுதுபார்த்தல்
17. மின் அலங்காரம் மற்றும் மின் விளக்குள் மூலம் அலங்காரம்
18. ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கான மரங்களை வெட்டுதல்
19. கணனி வலையமைப்பிற்கான வழங்குநர்கள்

| | நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக் கட்டணம் | |
|---|---|---|---|
| 1. | ரூ. 50,000.00 வரை | ரூ. 1000.00 | |
| 2. | ரூ. 50,000.00 முதல் ரூ. 100,000.00 வரை | ரூ. 1250.00 | |
| 3. | ரூ. 250,000.00 முதல் ரூ. 500,000.00 வரை | ரூ. 1750.00 | |
| 4. | ரூ. 500,000.00 முதல் ரூ. 1,000,000.00 வரை | ரூ. 2000.00 | |
| 5. | ரூ. 5,000,000.00 | ரூ. 3,000.00 | ICTAD M-07 |
| 6. | ரூ. 10,000,000.00 | ரூ. 4,000.00 | |
| 7. | ரூ. 250,000,000.00 | ரூ. 5,000.00 | |

### பொது நிபந்தனைகள்:

1. கீழே தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தை தயாரிப்பதுடன், வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வழங்கல் விடயத்திற்கு ரூ. 1,000.00 தொகையை செலுத்தி பதிவு செய்தல் வேண்டும். காசோலைகள், காசுக் கட்டளைகள் கெக்கிராவ பிரதேச சபைக்கு தலைவர், கெக்கிராவ பிரதேச சபை, கெக்கிராவ பெயரில் எழுதப்படல் வேண்டும். ஒப்பந்தக்காரர்களால் எதிரில் தரப்பட்டுள்ள தொகையை செலுத்துதல் வேண்டும்.
2. சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் பதிவை வழங்குநர்களுக்கு அப்பாலும் பொருட்கள் பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உரியது.
3. விலைமனுக்களை அங்கீகரிக்கப்பட்ட வழங்குநருக்கு குறித்த நேரம் குறித்த நேரத்திற்கு முன் பொருட்கள் மறறும் சேவைகளை வழங்குவதற்கு தவறின் மீண்டும் முன் அறிவித்தல் இன்றி சபை ஏற்றுக்கொள்ளும் அடுத்த விலைமனுதாரருக்கு ஓடர் சமர்ப்பிக்கப்படும்.
4. சரியான நேரத்தின் விலைமனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் சரியான நேரத்தில் சரியான தரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களின் பதிவு பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
5. பொருட்களை கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு முன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டக்கூடாது அத்துடன் குறைந்த பட்சம் 30 நாட்கள் கொண்ட கடன் வசதியை சபைக்கு வழங்குதல் வேண்டும்.

**எச்.எம்.எஸ்.பீ. ஹேரத்**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**கெக்கிராவ.**

2022.12.06ம் திகதி
**பிரதேச சபை, கெக்கிராவ.**
**தொ.பே.இல: 025-2264275/ 025-2263273**

### கெக்கிராவ பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

1. வழங்குநரின் பெயர்:.......................................................................
2. முகவரி : .......................................................................
3. தொ.பே இலக்கம்: .......................................................................
4. தேசிய அடையாள அட்டை இல: .......................................................................
5. வழங்கப்படும் உருப்படி/ பொருட்கள்/ சேவைகள்: ..........................................
6. பொருட்கள்/ உருப்படிகள்/ சேவைகளை வழங்குதல் பற்றி பெற்றுள்ள அனுபவம்.................
.......................................................................
.......................................................................
.......................................................................
7. இக்டாட் பதிவு இலக்கம் ...........................................................(கட்டிட வழிக்காக)
8. வியாபாரப் பதிவு இலக்கம் : .......................................................................

மேற்படி தகவல்கள் சரியானது எனவும், குறித்த இக்டாட் பதிவுச் சான்றிதழ் இதனோடு இணைக்கப்பட்டுள்ளதாகவும் இத்தால் உறுதி செய்கிறேன்.

கையொப்பம் ...........................................
திகதி ...........................................


**அலுவலக உபயோகத்திற்கு**

பற்றுச்சீட்டு இலக்கம் : .......................................................................
பதிவு செய்தல் ஆவணத்தின் பக்க இலக்கம்: ...................................................

விடயப் பொறுப்பு அதிகாரி ...........................................
தலைவர்/ செயலாளர்...........................................
திகதி ...................................

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



**106 கார்கள் விற்பனைக்கு**

Chery QQ Car WP KG-8707 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075271

Isuzu Gemini Car 64-2669 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075241

Renault Kwid Car WP CAT-0033 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075263

Tata Nano Car WP CAE-1356 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075257

Tata Nano Twist Car WP CAQ-0135 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075259

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

Micro Panda Car NC CAT-2262 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075266

Toyota Aqua Car SP CAQ-7472 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075228

Toyota Lexus SUV WP KI-3737 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075274

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

Nissan AD Wagon 64-5989 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075247

**112 மெஸ்டா கார்கள் விற்பனைக்கு**

Mazda Familia Car 19-4890 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075222




**117 வேன்கள் விற்பனைக்கு**

Mitsubishi Delica Van 57-9569 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075230

Nissan Vanette Van UP PE-7863 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075240

250-0090 Nissan Caravan Van அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075226





**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

Tata Safari Ex Jeep UP HD-8779 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075234



**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

Caterpillar 928G Wheel Loader NC ZA-8681 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075272

DFSK Unimo Truck NW PU-1359 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075295

EP ZB-1054 Kobelco LK300 Wheel Loader அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075255

JAC HFC 1020K F/ Body Truck WP LL-3366 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075282

Lanka Ashok Leyland Comet Dump NC LA-7749 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075270

Lanka Ashok Leyland ECOMET Dump NW LO-0596 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075291

Lanka Ashok Leyland Vikin WP NA-1876 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075285

La n ka Ashok Le y land 1613 WP LG - 1867 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பி எல்சி, கண்டி. 0 7 7 010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075279

Mahindra Bolero Maxi Truck NW PP-0421 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075293

Mahindra Bolero Maxi Truck NW PX-2686 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075221

Mahindra Bolero Maxi Truck WP DAA-5066 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075265

Mahindra Maxximo Truck WP PV-0411 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075290

Mahindra maxximo Truck NW DAA-8809 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075286

Mazda Titan Truck WP JR-1583 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075268

NC L E-9208 Lanka Asho k Leyland Motor Lorry, Yellow - 2008 கூடிய விலைக் கோரிக்கைக்கு. செரன் டிப் பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. 0812 200272. 075085

Tata Ace HT Truck WP PS-4412 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075288

Tata LPT 2515 F/ B Truck NP LL-0066 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075283

Tata 1615 Dump Truck NP LH-5108 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075278

Tata 207 S/CAB Truck NW LA-1007 அதியுயர் விலைக்குண்டு. செங்கடக ல பினான்ஸ் பிஎ ல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075289

Toyota Coaster Bus SP NB-7638 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075232

Toyota Coaster Bus 61-4268 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075233

Toyota Coaster Bus 61-4567 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075236



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

Bajaj Three Wheeler WP AAW-8045 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075244

EP BIU-4469 Honda Shine APDS-6 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075249

EP YQ-8845 Bajaj Three Wheeler அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075251

Hero Maestro Edge WP BIY-7328 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075254

Hero Pleasure Bike NC BIQ1812 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075258

Hero Pleasure Motor Bike NC BIS-0264 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075262

Piaggio Ape City Three WH WP YY-2457 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075292

Piaggio Ape City Three Wheel SG AAS-7490 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075224

Ranamoto Pattaya Motor Cycle NP BJB-5408 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075275

Yamaha FZ Bike WP BHH-9671 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075248

Yamaha Ray ZR DR WP BIN-4051 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 075250

### வேலைவாய்ப்பு



**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

35 வயதிற்குக் குறைந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. 0772299913, 0772286994. 074608



**325 தொழில்துறை பொது**

நீர்க்குழாய் வேலைகள், சீமெந்து வேலைகள் , CCTV பொருத்துதல், மின்சார வேலைகள் போன்ற அனைத்து வேலைகளிற்கும் வேலை வாய்ப்புக்கள் உண்டு. 0773097803. 71/ 3, பாமன்கட வீதி, கொழும்பு06. 075097

### பொது

**432 நானாவிதப் பொருட்கள்**

புதிய அல்லது பாவித்த ரோலிங் கேட் மோட்டர் மற்றும் மோட்டருடன் ரோலிங் கேட் தேவை. 0773097803. 71/ 3, பா மன்கட வீதி, கொழும்பு06. 075096



நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பருத்தித்துறை மதுவரி நிலையம் மற்றும் மதுவரி திணைக்கள அலுவலகத்திற்கான புதிய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல் - 2023

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பருத்தித்துறை மதுவரி நிலையம் மற்றும் மதுவரி திணைக்கள அலுவலகத்திற்காக பருத்தித்துறை பிரதேச செயலகப் பகுதியில் அமைந்துள்ள அறையொன்று 120 சதுர அடியிலான 06 அறைகள் மற்றும் சுமார் 250 சதுர அடியிலான நடு விராந்தையுடன் அலுவலகத்திற்கு பொருத்தமான கட்டிடமொன்று மற்றும் திணைக்கள வளாகத்தில் சுமார் 05 வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் வாடகை அடிப்படையில் இடமொன்றினை கொள்வனவு செய்வதற்கான மனுக்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு மனு கட்டளைகளுக்காகவும் மீளப்பெற முடியாத **ரூ.1,000/-** கட்டணத்தைச் செலுத்தி திணைக்களத்தின் காசாளரிடம் பெற்றுக் இரசீதினை **2022.12.06** ஆம் திகதியிலிருந்து **2022.12.27** ஆம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணிக்குள் இராஜகிரியவிலுள்ள தலைமை அலுவலகத்திலுள்ள காசாளரிடம் செலுத்தி சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணத்தினை நிதிப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஏற்றுக்கொள்ளல் **2022.12.27** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு நிறைவுபெறுவதுடன் மனுக்கள் உடனடியாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிதிப்பிரிவில் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல 353, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

# போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு ஆளுநர் அலுவலகத்தை அணுகமுடியும்

**கோப்பாய் குறூப் நிருபர்**

**வட மாகாண ஆளுநர் தியாகராஜா தெரிவிப்பு**

வட மாகாணத்தில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட வட மாகாண ஆளுநர் அலுவலகத்தை அணுகமுடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

அண்மையில் யாழ்.சிறைச்சாலையிலுள்ள போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை நேரடியாக சென்று அவர்களுடன் கலந்துரையாடினேன்.

போதைப்பொருள் பாவனைகளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கு வட மாகாணத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் சமுதாய மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அண்மையில் வெளிநாடு ஒன்றிலிருந்து மனநலப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட நோயாளியின் பின்னணியைப் புரிந்துகொள்வதற்காக விசேட வைத்தியரைக் கலந்தாலோசிக்க தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சென்றேன்.

அதேபோன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் 15 வயது சிறுவன் ஒருவன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு 7 நாட்களில் திடீரென இறந்து போன சம்பவம் தொடர்பில் ஊடகங்கள் மூலம் தெரியவந்தது.

இதேபோல் மற்றொரு 17 வயதுடையவர் போதைப்பொருள் பாவனை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே போதைக்கு அடிமையான எந்தவொரு நபரும் உடனடியாக ஆளுநர் அலுவலகத்தை அணுகலாம் .

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை இனம் கண்டு மறுவாழ்வு அளிப்பதற்கு பெற்றோர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களின் உதவிகள் தேவைப்படுகிறன. வட மாகாணத்தில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட நபர்களை மனிதாபிமானரீதியில் அணுகுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராகவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam



ஐ.எஸ்.ஆர்சி தனியார் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மடுக்கரைப் பகுதியில் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஐ.எஸ்.ஆர்சி நிறுவனத்தின் பணிப்பாளர் மொஹமட் சயாப், ஸ்தாபகரும் முஸ்லிம் ஹேன்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜனாப் மிஹ்லார் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படம்: தலைமன்னார் விஷேட நிருபர்)

# வைத்தியரின் காரில் போதைப்பொருள் கடத்தல்; இருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

வைத்தியர் என அடையாளப்படுத்தும் ஸ்ரிக்கர் ஒட்டிய காரில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சென்ற இரு இளைஞர்கள் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரில் பயணித்த இரு இளைஞர்களில் ஒருவரிடம் 600 மில்லிகிராமும் மற்றைய இளைஞனிடம் 430 மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த இளைஞன் ஒருவரின் சகோதரர் வைத்தியர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலவச கருத்தரங்கு

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றம் தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கை நடாத்தவுள்ளது. இக்கருத்தரங்கு நாளை (07) காலை 9.00 மணிக்கு டோரியா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மன்றத் தலைவர் செய்துள்ளார். சுழிபுரம் விக்ஸ். மகேந்திரன், பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மலசலகூட வசதியின்மையால் மாணவர்கள் அசௌகரியம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் பயன்பாட்டுக்கான மலசலகூடங்கள் சேதமடைந்தும் தண்ணீர் வசதிகள் இன்றி காணப்படுவதால் அதனை பயன்படுத்த முடியாது மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருவதாகதெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சிவடக்கு கல்வி நிலையத்தின் கீழ் உள்ள தருமபுரம் மகா வித்தியாலய வளாகத்தில் மாணவர்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன.

அதாவது நீர் விநியோக இணைப்புக்கள் சேதமடைந்தும் மலசலகூடங்களின் கூரைகள் சேதமடைந்தும் காணப்படுவதனால் மாணவர்கள் அதனை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

# பருத்தித்துறை நகரசபை பட்ஜட் தோல்வி

**கரவெட்டி தினகரன், யாழ்.விசேட நிருபர்கள்**

பருத்தித்துறை நகர சபை வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நேற்றையதினம் திங்கட்கிழமை தவிசாளர் இருதயராஜாவினால் சபையில் முன்வைக்கப்பட்டது.

அதனையடுத்து நடைபெற்ற விவாதத்தின் பின்னர் வரவு செலவு திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது அது ஒரு வாக்கினால் தோற்கடிப்பட்டது.

15 உறுப்பினர்களை கொண்ட சபையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேரும், தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஈழமக்கள் ஜனநாயக கட்சிகளை சேர்ந்த தலா ஒரு உறுப்பினருமாக 8 உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பின் 4 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் சுயேட்சை குழு ஆகியவற்றை சேர்ந்த தலா ஒரு உறுப்பினர் என 7 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட பருத்தித்துறை நகர சபையின் வரவு செலவு திட்டத்திற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு உறுப்பினர் எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்மாகாண உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் யாழ். விஜயம்



தென்மாகாணத்திலுள்ள காலி,மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பில் பார்வையிட்டனர். கபே அமைப்பினால் நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனனி வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இவ்விஜயம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்த குழுவினர் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அதன்போது மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனும் உடன் இருந்தார்.

# வர்த்தகர் வீட்டில் 28 பவுண் தங்க நகைகள் திருட்டு

**பணிப்பெண் உட்பட 7 பேர் கைது**

**(எம்.அமீனுல்லா)**

கண்டியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் சுமார் 28 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடிய குற்றச்சாட்டில் வீட்டுப் பணிப்பெண், அவரது மகன் மற்றும் மருமகன் உள்ளிட்ட 7 பேரை கண்டி பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் (4) கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 58 வயதுடைய பணிப் பெண் கலஹா பகுதியைச் சேர்ந்தவர் என்றும், கண்டி வித்யார்த்த மாவத்தையில் உள்ள மூக்குக் கண்ணாடி வர்த்தகரின் வீட்டில் சுமார் ஏழு வருடங்களாக பணியாற்றி வந்தவர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, சுகயீனமுற்ற குறித்த வர்த்தகர், வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதுடன் சந்தேக நபர் வீட்டில் தங்கி தனது வேலைகளை செய்து வந்துள்ளார்.

சந்தேக நபர் பல சந்தர்ப்பங்களில் தங்க நகைகள், மோதிரங்கள், காதணிகள் மற்றும் வளையல்களை திருடி தனது மகனையும் மருமகனையும் வர்த்தகரின் வீட்டிற்கு அழைத்து வந்து விற்பனைக்கு கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி சந்தேக பெண் சுமார் 28 பவுண் தங்கத்தை திருடிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளதுடன், கலஹா மற்றும் ஹேவாஹெட்ட ரஹதுங்கொட பிரதேசத்தில் தங்கப் ஆபரணங்கள் செய்யும் மூன்று இடங்களில் சுமார் ஆறு பவுண் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் இவர்களிடம் தங்க பொருட்களை வாங்கிய இரு தம்பதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். தங்கப் ஆபரணங்கள் செய்யும் வேலைத்தலங்கள் அனுமதியின்றி நடத்தபட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குற்றப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் விஜேரத்ன, தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் .

## மலைச்சாரல்



ஐக்கிய அரபு இராச்சியத்தின் 51ஆவது தேசிய தின விழா கொழும்பு ஷங்ரி லா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பல்வேறு நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், இராஜாங்க அமைச்சர்களான அ. அரவிந்தகுமார், காதர் மஸ்தான் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)

# சிவனொளிபாதமலை குருவிட்ட வழியாக யாத்திரை மேற்கொள்வதில் சிக்கல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொள்ளப்படும் குறுகிய வழிகளில் ஒன்றான குருவிட்ட முதல் சிவனொளிபாதமலை வரையிலான வீதியை புனரமைத்து ஒழுங்கு செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக சிவனொளி பாதமலை யாத்திரை ஏற்பாட்டு குழுவினர் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று குருவிட்ட பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வருடம் சிவனொளிபாதமலை யாத்திரையை முன்னிட்டு பெல்மதுளை கல்பொத்தாவல விகாரையில் இருந்து புத்தர் சிலையை தாங்கிய 4 ஊர்வலங்களில் ஒன்று இவ்வழியாகவும் பயணிக்கவுள்ளது.

இவ்வழியே சிவனொளிபாத மலையை அடைய 13 கிலோமீட்டர்கள் மட்டுமே உள்ள போதிலும் பயணிப்பதற்கு ஒரு கடினமான வழியாகவுள்ளதால் குருவிட வர்ணகலை வரையிலான கரடுமுரடான குண்டும் குழியுமான வீதியைப் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இந்த வீதி கடந்த காலங்களில் பயன்படுத்தப்படாமல் காடுகள் வளர்ந்து யாத்திரிகர்கள் பயணிக்க முடியாதளவுக்கு உள்ளதால் இதனைப் சீர் செய்ய வேண்டிய அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

எனினும் இப்பணிகளுக்கு குருவிட பிரதேச சபையிடம் நிதி இல்லாமையால் இந்நிதியை சப்ரகமுவ மாகாண ஆளுநரிடம் கேட்பதெனவும் இங்கு தீர்மானிக்கப் பட்டது.

அத்துடன் வீதியை சுத்தம் செய்வதற்கு அவசியமான தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இவர்களுக்கான கூலிகளை வழங்குவதற்கும் மாற்று வழிகளை பயன்படுத்துவது எனவும் இங்கு தீர்மானிக்கப் பட்டது.

# ஏற்றுமதி விவசாய திணைக்களத்தால் புதிய ஏலக்காய் வகை அறிமுகம்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

ஏலக்காய் பயிரின் புதிய இனம் ஒன்றை ஏற்றுமதி விவசாயத்திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது.

இந்த வகை ஏலக்காயை நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தி செய்ய முடியும் என ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி சரச்சந்திர தர்மபராக்கிரம தெரிவித்தார்.

பேராதனை, கெட்டம்பேயில் உள்ள ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தில் வைத்து இது பற்றி தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்

இது காலவரை மலையகப் பகுதிகளில் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டு வந்த ஏலக்காயின் இப் புதிய இனத்தை நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் உற்பத்தி செய்ய முடியும். குறிப்பாக தென் மாகாண ஈரவலயங்களிலும் இவ்வகை நன்கு வளரக்கூடியது. தற்போது மத்திய ஈரவலயங்களில் உள்ள மலைப்பாங்கான பிரதேசங்களிலே அது சிறப்பாகப் பயிரிடப்பட்டுள்ளது. இப்புதிய இன வகையை கண்டி, நுவரெலியா, மாத்தளை, குருணாகல், காலி, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களிலும் பயிரிட்டு நல்ல விளைச்சலை பெற முடியும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்கள் மற்றும் பலசரக்கு பொருட்களில் அதிகூடிய விலை கொண்ட பயிராக ஏலக்காய் காணப்படுவதாக தெரிவித்த அவர், மேற்படி புதிய இனத்தைக் கொண்டு அதிக உற்பத்தியை மேற்கொண்டால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் தெரிவித்தார்.

இப்புதிய இனத்திற்கு "ரன்வெலி யசஹ்ரீ" எனப் பெயரிடப்பட்டுள்ளது.இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படும் உற்பத்தியாளர் தமது பிரதேச கமநல சேவைகள் மத்திய நிலைய செயற்திட்ட அதிகாரியை சந்திக்குமாறும் அவர் தெரிவித்தார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் வைத்தியர் சடலமாக மீட்பு

**(எம்.ஏ. அமீனுல்லா)**

பேராதனை போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் பிலிமத்தலாவ உஊராபோல பிரதேசத்தில் உள்ள வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தாயான ரோகிணி தமயந்தி வீரசிங்க அபேநாயக்க ( 54) என்ற வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வைத்தியரின் சடலம் கடந்த சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வீட்டின் அறை ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் நேற்று (5) தெரிவித்தனர்.

சம்பவத்தன்று மருத்துவரின் மகன் வீட்டின் மற்றொரு அறையில் தூங்கிக் கொண்டிருந்ததாகவும் அப்போது வீட்டில் இருந்து வெளியே சென்றிருந்த தனது மகளை அழைத்து வருவதற்காக கணவர் வெளியே சென்றிருந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

# வெடிபொருள் தயாரிக்க பயன்படும் அமோனியம் நைத்ரேட்டுடன் கினிகத்தேனையில் இருவர் கைது

**ஹற்றன் மத்திய விசேட நிருபர்**

கினிகத்தேனை பேருந்து நிலையத்திற்கு அருகில் வெடிபொருட்களுக்கு பயன்படுத்தப்படும் கறுப்புப் பொடி மற்றும் அமோனியம் நைட்ரேட்டுடன் இருவரை கினிகத்தேனை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இருவர் கினிகத்தேன பேருந்து நிலையத்திற்கு அருகில் வைத்து அந்த பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில் ஒருவரிடம் 22,650 மில்லிகிராம் கறுப்பு பவுடர் மற்றும் 39,000 மில்லிகிராம் அமோனியம் நைத்ரேட் இருந்ததுடன், மற்றைய நபரிடம் 86,680 மில்லிகிராம் கறுப்பு பவுடர் மற்றும் அம்மோனியம் நைத்ரேட் இருந்ததாக கினிகத்தேனை பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் விராஜ் விதானகே தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரிடமும் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேக நபர்கள் இருவரையும் ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விராஜ் விதானகே மேலும் தெரிவித்தார்.

# ஹப்புத்தளை பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது குளவிகள் தாக்குதல்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஹப்புத்தளைக்கு சுற்றுலா வந்த உள்நாட்டு சுற்றுலா பயணிகள் 20பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பங்கட்டி பிரதேச மருத்துமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மட்டக்களப்பு பகுதியிலிருந்து 17 பேரும் இரத்தினபுரியிலிருந்து மூன்று பேருமாக ஹப்புத்தளைக்கு வந்து ஹப்புத்தளைப் பகுதியின் உல்லாச இடங்களை பார்வையிட்டனர்.

இதன்போது அங்கே மரமொன்றிலிருந்து குளவிக் கூடு கலைந்து அவர்களை கொட்டத் தொடங்கியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் (04) மாலை இடம்பெற்றுள்ளது. உடனடியாக அங்குகூடிய பிரதேச இளைஞர்கள் குளவிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர புகையை மூட்டியுள்ளனர்.

குளவிகள் அடங்கியதும் கலைந்ததும் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான 20 பேரை பங்கட்டி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர்களுக்கு அங்கு தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களில் 10 பெண்களும் 03 சிறார்களும் 07 ஆண்களும் அடங்குவர்.

பாடசாலை மெய்வல்லுனர்:

## மேலும் ஆறு சாதனைகள்





கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெற்றுவரும் பாடசாலை மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் மூன்றாவது நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) மேலும் ஆறு போட்டி சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இம்முறை போட்டியில் அதிக அவதானத்தை பெற்ற வீரரான இசுரு கௌசல்ய 20 வயதுக்கு உட்பட்ட 200 மீற்றர் ஓட்டப்போட்டியை 21.47 விநாடிகளில் முடித்து புதிய சாதனை படைத்தார்.

20வயதுக்கு உட்பட்ட 110 மீற்றர் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் பங்கேற்ற கொழும்பு றோயல் கல்லூரி வீரர் நதுன் பண்டார 13.82 விநாடியில் போட்டித் தூரத்தை முடித்து சாதனை படைத்தார்.

அதேபோன்று பெண்களுக்கான 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தருஷி கருணாரத்ன தலைமையிலான ஏ ரத்நாயக மகா வித்தியாலய அணி புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது. இதன் மூலம் இம்முறை போட்டிகளில் ஹெட்ரிக் தங்கப் பதக்கம் வென்று தருஷி கருணாரத்ன சாதனை படைத்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் மேல் மாகாணம் 651 புள்ளிகளுடன் வலுவான முன்னிலையில் இருப்பதோடு 231 புள்ளிகளைப் பெற்றிருக்கும் வடமேல் மாகாணம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

பாடசாலை மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி இன்றுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ண கால்பந்து:

# காலிறுதியில் மோதும் பிரான்ஸ் - இங்கிலாந்து

உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் காலிறுதியில் பலப்பரீட்சை நடத்த நடப்புச் சம்பியன் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து அணிகள் தகுதி பெற்றன.

கடந்த ஞாயிறு மற்றும் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற நொக் அவுட் சுற்றுப் போட்டிகளில் பிரான்ஸ் அணி போலந்தை 3–1 என்ற கோல் வித்தியாசத்திலும், இங்கிலாந்து அணி செனகலை 3–0 என்ற கோல் வித்தியாசத்திலும் இலகுவாக வீழ்த்தின.





இதன்போது பிரான்ஸ் அணியின் முன்கள வீரர் மம்பப்பே இரட்டை கோல்களை புகுத்தி இம்முறை உலகக் கிண்ணத்தில் அதிக கோல்கள் பெற்றோர் வரிசையில் ஐந்து கோல்களுடன் முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டார்.

அதேபோன்று ஒலிவியர் கிரௌட் பிரான்ஸுக்காக ஆரம்ப கோலை புகுத்தி அந்த அணிக்காக அதிக கோல்களை பெற்றவர் என்ற முன்னாள் வீரர் தியரி ஹென்ரியின் சாதனையை முறியடித்தார். கிரௌட் பிரான்ஸ் அணிக்காக பெறும் 52ஆவது கோல் இதுவாகும்.

இதன்படி இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் அணிகள் மோதும் காலிறுதிப் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் அணி 60 ஆண்டுகளுக்கு முன்னர் பிரேசில் நடப்புச் சம்பியனாக உலகக் கிண்ணத்தை தக்கவைத்த பின், முதல் முறை அந்த சாதனையை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மறுபுறம் இங்கிலாந்து 1966 ஆம் ஆண்டில் சொந்த மண்ணில் உலகக் கிண்ணத்தை வென்ற பின் அதனை மீண்டும் கைப்பற்றும் எதிர்பார்ப்புடன் உள்ளது.

# எல்.பி.எல் இன்று ஆரம்பம்



மூன்றாவது லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) டி20 கிரிக்கெட் தொடர் ஹம்பாந்தோட்டையில் இன்று (06) ஆரம்பமாகவுள்ளது.

மொத்தம் ஐந்து அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் 42 இலங்கை வீரர்கள் மற்றும் 30 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் நடப்புச் சம்பியனும் தொடர்ந்து இரண்டு முறையும் கிண்ணத்தை வென்ற அணியுமான ஜப்னா கிங்ஸ் அணி திசர பெரேரா தலைமையில் களமிறங்குகிறது.

கடந்த முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணிக்கு குசல் மெண்டிஸும், கொலொம்போ ஸ்டார்ஸ் அணிக்கு அஞ்சலோ மத்தியுஸும், தம்புல்ல அவுரா அணிக்கு தசுன் சானக்கவும் கண்டி வொரியர்ஸ் அணிக்கு வனிந்து ஹசரங்கவும் தலைவராக செயற்படவுள்ளனர்.

வெளிநாட்டு வீரர்களில் அதிகபட்சமாக பாகிஸ்தானின் எட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஆப்கான் அணிகளைச் சேர்ந்த தலா ஆறு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஆரம்பப் போட்டிகள் ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து பல்லேகலவிலும் பின்னர் இறுதிக் கட்டப் போட்டிகள் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்திலும் நடைபெறவுள்ளன. தொடரின் இறுதிப் போட்டி டிசம்பர் 23ஆம் திகதி நடைபெறும்.

# தேசிய கபடி சம்பியனானது அம்பாறையின் மதீனா கழகம்




25 வயதுக்குட்பட்ட தேசிய இளையோர் கபடி சாம்பியன்ஷிப் தொடரின் ஆண்கள் பிரிவில் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு டொரிங்டன் உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 25 மாவட்டங்களிலும் இருந்து 25 அணிகள் பங்கு பற்றின.

இதன் இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை அம்பாறை மாவட்ட அணியான மதீனா விளையாட்டுக் கழகம் 52–32 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிகொண்டது.

தொடரின் சிறந்த வீரராக இலங்கை தேசிய கபடி அணி வீரரும், அம்பாறை மாவட்ட நிந்தவூர் மதீனா விளையாட்டு கழக கபடி அணித் தலைவருமான எஸ்.எம் சபிஹான் தெரிவு செய்யப்பட்டார்.

# இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய யாப்பை அமைக்க நடவடிக்கை




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக புதிய யாப்பு ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு புதிய யாப்பு ஒன்றை தயாரிக்குமாறு அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி கோரி முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் உட்பட தரப்பினர் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையிலேயே விளையாட்டுத் துறை அமைச்சர் சார்பில் தோன்றிய கூடுதல் தலைமை சட்டத்தரணி சுமதி தர்மவர்தன இதனைத் தெரிவித்தார்.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மொஹமட் லபாரின் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கூடுதல் தலைமை சட்டத்தரணி கூறியதாவது, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் புதிய யாப்பை அமைப்பதற்காக தொழில்நுட்ப குழு ஒன்றின் ஆலோசனையை பெறுவதாக தெரிவித்தார்.

புதிய கிரிக்கெட் யாப்பை அமைப்பதற்கு இணையாக விளையாட்டுச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விளையாட்டு ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் கூடுதல் தலைமை சட்டத்தரணி தெரிவித்தார்.

சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த மனு மீதான விசாரணையை வரும் பெப்ரவரி 28ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டது.

# பாரிய தொலைநோக்கியின் நிர்மாணப் பணி ஆரம்பம்



21ஆம் நூற்றாண்டின் பாரிய விஞ்ஞானத் திட்டம் ஒன்று நேற்று (05) தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

சதுர கிலோமீற்றர் அணி என்று அழைக்கப்படும் இந்தத் திட்டம் 2028 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படும்போது அது உலகில் மிகப்பெரிய வானொலித் தொலைநோக்கியாக பதிவாகவுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் பிரிக்கப்பட்டு நிர்மாணிக்கப்படும் இந்தத் தொலைநோக்கியின் தலைமையகம் பிரிட்டனில் அமையவுள்ளது. இதன் மூலம் வானியல் உலகின் பெரும் கேள்விகளுக்கு விடை காண எதிர்பார்க்கப்படுகிறது.

ஐன்ஸ்டைன் கோட்பாடுகள் மட்டுமன்றி வேற்றுக்கிரக உயிரினங்கள் பற்றிய ஆய்வுக்கு இந்தத் தொலைநோக்கி பயன்படுத்தப்படவுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் தொலைதூர மர்சிசன் ஷிர் மற்றும் தென்னாபிரிக்காவின் கேப் டவுனின் க்ரூங்கில் நேற்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் இந்தத் திட்டத்திற்கு தலைமை ஏற்றுள்ள எட்டு நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

6 மாதம் விண்வெளியில் தங்கிய:

# சீன விண்வெளி வீரர்கள் மூவர் பூமிக்கு திரும்பினர்



ஆறு மாதங்களாக சீன விண்வெளி நிலையத்தில் தங்கி பணிகளை மேற்கொண்டு வந்த அந்நாட்டின் 3 விண்வெளி வீரர்களும் ஷென்சோ–14 விண்கலத்தில் பூமிக்கு திரும்பினர்.

விண்வெளியில் டியாங்காங் ஆராய்ச்சி நிலையம் கட்டமைப்பதற்காக சீனா சுழற்சி முறையில் விண்வெளி வீரர்களை அனுப்பி வருகிறது.

அதன்படி, இறுதிக் கட்ட பணிகளுக்காக 3 பேர் சில தினங்களுக்கு முன்பு விண்வெளி நிலையம் சென்றதை அடுத்து, ஏற்கனவே அங்கு தங்கி பணிகளை மேற்கொண்டு வந்த ஒரு வீராங்கனை உள்ளிட்ட 3 விண்வெளி வீரர்களும் இன்னர் மங்கோலியா பிராந்தியத்தில் பத்திரமாக தரையிறங்கினர்.

சோவியட் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்து விண்வெளிக்கு விண்வெளி வீரர்களை அனுப்பிய மற்றும் அங்கு விண்வெளி நிலையத்தை அமைத்த மூன்றாவது நாடு சீனாவாகும்.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்யாவின் எண்ணெய் மீதான ஐரோப்பிய விலை வரம்பு அமுல்

## எண்ணெய் விலை அதிகரிப்பு



ஐரோப்பிய ஒன்றியம், ஜி7 நாடுகள் மற்றும் அவுஸ்திரேலியா இடையே இணக்கம் எட்டப்பட்ட கடல் வழியாக வரும் ரஷ்ய எண்ணெய் மீதான விலை வரம்பு நேற்று (05) முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்த விலை வரம்பின்படி ரஷ்ய மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 60 டொலருக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் விநியோகத்தை உறுதி செய்து உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவின் நிதித் திறனை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் உற்பத்தியை குறைக்க வேண்டி ஏற்பட்டாலும் இந்த நடவடிக்கைக்கு கட்டுப்படப்போவதில்லை என்று ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

கடல் வழியாக வரும் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை மற்றும் அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் பிரிட்டனின் அதனை ஒத்த வாக்குறுதிகளுக்கு மத்தியிலேயே இந்த விலை வரம்பு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி ஜி7 மற்றும் ஐரோப்பிய ஒன்றிய டாங்கர்கள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் கடன் நிறுவனங்களை பயன்படுத்தி மூன்றாம் தரப்பு நாடு ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்படும் ரஷ்ய எண்ணெய் பீப்பாய் ஒன்று 60 டொலர் அல்லது அதற்கு குறைவான விலைக்கே விற்க முடியும்.

இந்நிலையில் உலகின் முக்கிய கப்பல் வர்த்தகம் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் ஜி7 நாடுகளை தளமாகக் கொண்டு இயங்குவதால், ரஷ்யாவுக்கு அதிக விலைக்கு எண்ணெய் விற்பது கடிமாகக் கூடும் என்று நம்பப்படுகிறது.

இந்த நடவடிக்கையை செயற்படுத்தாத நாடுகள் இந்த விலைவரம்பை விடவும் அதிக விலைக்கு ரஷ்ய எண்ணெயை வாங்க முடியும் என்றபோதும் அதற்கு மேற்கத்திய நாடுகளின் சேவைகளை பயன்படுத்த முடியாது.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடாக உள்ள ரஷ்யா, இந்த விலை வரம்பை ஏற்கப்போவதில்லை என்றும் அந்தக் கட்டுப்பாட்டின் கீழ் எண்ணெய் விற்கப்போவதில்லை என்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறி இருந்தது.

மேற்கத்திய உலகின் இந்த நடவடிக்கை சுதந்திர வர்த்தகத்தின் மீது முழுமையாக தலையிடுவதாக இருப்பதோடு அது விநியோகத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தி உலகளாவிய வலுசக்தி சந்தைகளை நிலைகுலையச் செய்யும் என்று ரஷ்ய பிரதி பிரதமர் அலெக்சாண்டர் நொவக் எச்சரித்துள்ளார்.

இந்த விலை வரம்பை அடுத்து எண்ணெய் விலையும் நேற்று அதிகரித்துள்ளது. ப்ரென்ட் க்ரூட் எண்ணெய் விலை 0.6 வீதம் அதிகரித்து பீப்பான் ஒன்று 86 டொலருக்கு மேல் பதிவானது.

எனினும் எண்ணெய் உற்பத்தியை குறைக்கும் கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய ரஷ்யாவும் உள்ளடங்கிய எண்ணெய் உற்பத்திய நாடுகளில் ஒபெக் பிளஸ் குழு தீர்மானித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.